பக்கங்கள் : 12+IV = பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 24 சனிக்கிழமை (09~08~2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:253

# ஆபத்தான பீடி, சிகரெட் வகைகள் குடாநாட்டில் அமோக விற்பனை!

## அதிரடிச் சோதனையில் அதிர்ச்சித் தகவல்கள்

யாழ்ப்பாணம்,ஓக.9

அரச அங்கீகாரம் பெறாமல் வெளி நாடுகளில் இருந்து கடத்திவரப்பட்ட பெருமளவு பீடி மற்றும் சிகரெட் போன்ற புகை பொருள்கள் குடா நாட்டுச் சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளன என்று எச்சரிக்கை விடுக் கப்பட்டிருக்கின்றது.

உடல் நலத்துக்கு தீங்கு விளை விக்கக் கூடிய ஆபத்தான போதைப் பொருள்கள் கலந்து தயாரிக்கப்பட்ட புகைபொருள்களும் இவற்றில் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்நகரப் பகுதியிலும், திருநெல் வேலி பொதுச்சந்தைப் பகுதியிலும் உள்ள விற்பனை நிலையங்கள் சில வற்றில் நேற்று நடத்தப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது இத் தகைய பீடி மற்றும் சிகரெட் என்பன பல்லாயிரக்கணக்கில் கைப்பற்றப்ப ட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் பகுதி மதுவரித் திணைக்களங்களைச் சேர்ந்த மதுவரி அதிகாரிகள் குழு ஒன்றே விற்பனை நிலையங்களில் அதி ரடிச் சோதனை நடத்தி பெருமளவு புகைப் பொருள்களைக் கைப்பற்றியி ருக்கிறது.



மீட்கப்பட்ட புகைபொருள்கள்

பெருமளவு வெள்ளை பீடிகள் கைப பற்றப்பட்டிருக்கின்றன. சிங்கள மொழி யிலான பெயருடன் காணப்படும் இந் தப் பீடிகள் அரச அங்கீகாரம் இன்றி தயாரிக்கப்பட்டவை என்றும் -

இவற்றில் கஞ்சா போன்ற போதைப பொருள்கள் கலக்கப்பட்டிருக்க வாய்ப் புண்டு என்றும் -

அதிகாரிகள் கூறுகின்றனர்.

குடாநாட்டில் உருவாகி இருக் கும் புதிய சந்தை வாய்ப்பைப் பயன் படுத்தி இவை போன்ற அதிக போதை யூட்டும் ஆபத்தான புகைப் பொருள் களை கடத்திவந்து விற்பனை செய் வதில் சில வியாபாரிகள் ஈடுபட்டி ருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

நேற்றுக் கைப்பற்றப்பட்ட பல் லாயிரக்கணக்கான பீடிகள், சிகரெட் டுகள் என்பன ஏ-9 தரைப்பாதை வழியே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந் தவை என்று மதுவரி அதிகாரிகள் தெரிவித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஓக.9

கடந்த புதன்கிழமை வடமராட்சிக் கடலில் பிடிக்கப்பட்ட 10 இந்திய மீன வர்களும் நேற்றுப் பொலீஸாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் படகோட்டிகளாக இருந்த இருவரையும் விளக்கமறி யலில் வைக்குமாறும் ஏனையோரை விடுதலை செய்யுமாறும் நீதிவான் உத் தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 8 மீன வர்களையும் இலங்கை கடற்படையி னர் இன்று அழைத்துச் சென்று இந்திய கடற்படையினரிடம் கையளிப்பார் கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## முகவர் நிலையங்களுக்குத் தடை

குவைத்தில் இலங்கை தொழில் வாய்ப்பு அமைப்புகளுடன் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் 26 முகவர் நிலையங்களின் செயற்பாடு களை குவைத் நாட்டு அரசாங்கம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் விரைவில் இலங்கை வருகின்றார்

## நேற்றுமுன்தினம் இணக்கம் தெரிவிப்பு

புதுடில்லி,ஓகஸ்ட்9

**இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், இலங்கை அரசின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இணங் கியிருக்கிறார்.**

**இலங்கை அரசின் சார்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப பன விடுத்த அழைப்பை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஏற்றுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

தற்போது புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் விஞ்ஞான, பொரு ளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இந்திப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பொனாண்டஸை சந்தித்தார். அப்போது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரின் அழைப்பை அமைச்சர் மொறகொட கையளித்தார். அதனை ஏற்றுக்கொள்வது என்ற முடிவை அமைச்சர் பெர்னாண்டஸ் அப்போது வெளியிட்டார் எனக் கூறப் பட்டது.

இந்தியாவின் பாதுகாப்பு விவகா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு பளையில்

### நாளை ஞாயிறன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஓக.9

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் மாவட்டத்துக்கான பேராளர் மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பளை மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள கிராமிய, பிரதேச, கோட்ட மற்றும் மாவட்ட மட்ட தேசிய எழுச்சிப் பேரவைக ளின் உறுப்பினர்கள் மற்றும் ஆலோ சகர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடு கள் குறித்து யாழ்.மாவட்ட அரசி யல் துறை அலுவலகத்தில் நேற்று இரவு நடத்தப்பட்ட செய்தியாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தங்கியிருந்த பதின்நான்கு இந்தியர்கள் கைது!

அம்பாறை,ஓக.9

'விஸா' முடிவடைந்த பின்னரும் சட்டவிரோதமாக அம்பாறையில் தங்கியிருந்த 14 இந்தியர்கள் நேற் றுப் பொலீஸாரால் கைது செய்யப் பட்டனர்.

இவர்களைத் தங்குவதற்கு இடம ளித்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரும் கைது செய்யப்பட்டார். தமிழ நாட்டைச் சேர்ந்த இந்த 14 பேரும் சுற்றுலாப் பயணிகளுக்கான ஒரு மாதகால 'விஸா'வைப் பெற்று கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வந்தி ருந்தனர். இவர்களுக்குரிய 'விஸா' கடந்த மே மாதம் 3ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டதாகவும் -

கடந்த மூன்று மாதங்களாக இவர் கள் கொழும்பில் தங்கியிருந்தனர் என வும்- பின்னர் கடந்தவாரம் அம்பா றைக்கு வந்திருந்தனர் எனவும்- பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த 14பேரும், இவர்களைத் தங் கவைத்திருந்தவரும் நேற்றுக் காத் தான்குடி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 14 பேரை யும் அடுத்த மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவுக்கு அனுப்பிவைப் பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும்- இவர்களை தங்கவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப பட்ட கல்முனை வாசியை 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனும திக்குமாறும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தவிட்டார். (ஐ-4)

## குரங்குபாஞ்சான் முகாம் பிரச்சினையில் தலையிட நோர்வேயிடம் கோரிக்கை

### கண்காணிப்புக்குழு எழுத்து மூலம் அறிவிப்பு

கொழும்பு,ஓக.9

கிண்ணியா, குர்ங்குபாஞ்சான் முகாமை விடுதலைப் புலிகள் அகற் றிக்கொள்வது தொடர்பான விடயத் தில் தலையிடுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நோர்வே அர சிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

பிரச்சினைக்குரிய குரங்குபாஞ் சான் முகாமை அகற்றிக்கொள்ளு மாறு கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளிடம் விடுத்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாததை அடுத்தே நோர்வே அரசிடம் கண்காணிப்புக் குழு இக்கோரிக்கையை விடுத்திருக் கின்து.

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் ஒரு செயல் இது என்பதால் நோர்வே அரசை தலையிடுமாறு கோருவ தெனத் தீர்மானிக்கப்பட்டது என்று கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலை வரான ஹொக்லண்ட் தெரிவித்திருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை டிசெம்பரிலேயே நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.9

ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகள் எதிர்வ ரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி நடை பெறவுள்ளது என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இப்பரீட்சைகள் கடந்த வருடங்க ளில் ஓகஸ்ட்மாத (இம்மாத) நடுப் பகுதியிலேயே நடைபெற்றுவந்தன. ஆனால், அண்மையில் தென்பகுதியில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தங்கள் காரணமாக - இந்த ஆண்டுக்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகள் எதிர்வரும் ஒக் ரோபர் மாத முற்பகுதியில் இடம் பெறுமென முன்னர் தெரிவிக்கப்பட்டி ருந்தது. (ஐ-5)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு கிழக்கிற்குத் தனியாக வேண்டுமாம்

### முஸ்லிம் எம்.பிக்கள் அமைப்பு தீர்மானம்

கொழும்பு,ஓக.9

விடுதலைப் புலிகளுக்கு இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு வழங் கப்படுமேயானால் கிழக்கு மாகா ணத்திற்கும் கட்டாயமாகத் தனியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்படவேண்டும் என்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப் புத் தீர்மானித்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இரவு கூடிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் கள் இத்தீர்மானத்தை மேற்கொண்ட னர் என்று அமைப்பின் செயலாளரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரி வித்திருக்கிறார்.

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் புத்திஜீவிகள், சட்டவல் லுநர்கள் ஆகியோரும் இந்த அமைப பின் கூட்டத்தில் கலந்துகொண் டனர் இக்கூட்டம் ஐந்து மணிநேரம் நீடித்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும அமைச்சருமான ரவூபஹக்கீம் தலை மையிலான முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏ. எல்.எம்.அதாவுல்லா தலைமையி லான நாடாளுமன்ற உறுப்பினர்க ளும், தேசிய ஐக்கிய் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் அக்கறை புலிகளுக்கு இல்லை என்கிறார் ஜனாதிபதி

## பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது கருத்து

கொழும்பு,ஓக.9

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன்கிழமை தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை இராப்போசன விருந்துக்காகத் தனது மாளிகைக்கு அழைத்திருந்தார்.

விருந்துக்கு முன்னர் கருத்துப் பரிமாறலுக்கு இடமளித்திருந்தார். இரு தரப்பினரும் நேரில் பேசிச் சந்தேகங்களுக்குத் தெளிவுபெற அது நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. கருத்துப்பரிமாறல் வாதப்பிரதிவாதங்களாக உருவெடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

சமாதானப் பேச்சுக்கள், சமஷ்டிக் கட்டமைப்பில் தீர்வு, சுயநிர்ணய உரிமை, இடைக்கால நிர்வாகம், அரசியல் சகவாழ்வு, அபிவிருத்தி லொத்தர்சபை என்று இப்படிப் பல்வேறு விடயங்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட விடயங்களே முதல் இடத்தையும் கூடுதலான நேரத்தையும் பிடித்தன.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளுக்கு அக்கறை இல்லை. அவர்கள் அரசாங்கத்தைத் தவறான வழியில் இட்டுச்செல்கிறார்கள். ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்து முடிந்துவிட்டன. மூலப்பிரச்சினைகள் பற்றி இதுவரை எதுவுமே பேசவில்லை. ஏன்? விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை இன்னும் கைவிடவில்லை - என்றார் ஜனாதிபதி.

அப்போது தமிழ்ப் பத்திரிகையாளர்கள் குறுக்கிட்டார்கள்.

இருபது வருடங்களாகப் போர் புரிந்துவந்த விடுதலைப் புலிகள், பிரச்சினைக்கு பேச்சு மூலம் சமாதான வழியில் தீர்வுகாண விரும்பித்தானே அரசுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு பேச்சுக்குச் சென்றார்கள். ஒஸ்லோ பேச்சின்போது தமிழீழத்தைத் தாம் வலியுறுத்தவில்லை என்றும், சமஷ்டிக் கட்டமைப்பில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய திட்டத்தைத் தாம் பரிசீலனை செய்யத் தயார் என்றும் அறிவித்தார்களே என்று தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அதற்கு ஜனாதிபதியிடம் பதில் இல்லாமல் போகுமா?

அவர்கள் கூறுவது என்ன சமஷ்டி? உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி என்கிறார்கள். உள்ளக சுயநிர்ணய உரிமை என்று எதுவும் கிடையாது. நான் அது பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. சுயநிர்ணய உரிமை பிரிந்து செல்வதற்குத்தான். அதாவது, பிரிந்து சென்று ஈழம் அமைக்க வழி தேடுகிறார்கள் என்றார் ஜனாதிபதி.

அவ்வளவோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. பிரபாகரன் சமஷ்டிக்குச் சம்மதிப்பாரேயானால் நான் என்னுடைய தலையை வெட்டுவித்து அதைப் பிரபாகரனுக்கு அனுப்பி வைக்கச் செய்வேன் என்று சூளுரைத்தார்.

அப்போது தமிழ்ப் பத்திரிகையாளர்கள் குறுக்கிட்டனர் என்றாலும், அந்த நேரத்தில் அவர்களுக்கு இடமளிக்காது ஜனாதிபதி தொடர்ந்தார்.

தமிழீழம் நடத்துவதற்குத்தான் விடுதலைப் புலிகள் இப்போது இடைக்கால நிர்வாகம் கேட்கிறார்கள் - என்றார்.

*தமிழ்ப் பத்திரிகையாளர்கள்:-*

வடக்கு - கிழக்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும், மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தான் இடைக்கால நிர்வாகத்தைத்தாம கேட்பதாகப் புலிகள் கூறுகிறார்கள்.

இவற்றைக் கையாள்வதற்கு 'சிரான்' போன்ற குழுக்கள் நியமிக்கப்பட்டதும் இடைக்கால நிர்வாகத்தை அவர்கள் வற்புறுத்தவில்லை; எந்தக் குழுவும் சரியாக இயங்கவில்லை. மக்களின் கஷ்டம் தீரவில்லை என்பதைக் கண்டதும்தான் மீண்டும் இடைக்கால நிர்வாகத்தைத் தாம் கோருவதாக அவர்கள் சொல்லுகிறார்களே!

*ஜனாதிபதி:* இடைக்கால நிர்வாகம் என்கிறார்களே! அது எந்த இடைக் காலம்?

*பத்திரிகையாளர்:* பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணப்படும் வரையான காலத்தையே இடைக்காலம் என்கிறார்கள்.

*ஜனாதிபதி:* விடுதலைப் புலிகளுக்கு நிரந்தரத் தீர்வில் ஆர்வமும் நம்பிக்கையும் இருந்தால் கூடுதலான நேரம் பேசி ஒரு மாதத்திற்குள் நிரந்தரத் தீர்வு கண்டுவிடலாம். அதை விட்டுவிட்டு இடைக்கால நிர்வாகம் கோருகிறார்கள்.

*பத்திரிகையாளர்:* இப்போதுள்ள அரசமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஏற்படுவது அறவே சாத்தியமில்லையே!

*ஜனாதிபதி:* அரசமைப்பை மாற்றிகொள்ளலாம்.

*தமிழ்ப் பத்திரிகையாளர்கள்:*

நீங்களும் உங்கள் ஆட்சியின் போது இடைக்கால நிர்வாகம் கொடுக்க முன் வந்தீர்களே!

*ஜனாதிபதி:* ஆமாம், 2000ஆம் ஆண்டில் புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது இந்த விடயமும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. நாம் வழங்க முன் வந்தது இந்தியாவில் உள்ள சமஷ்டி முறையைவிட மேலானது. அதைப் பிரபாகரன் நிராகரித்துவிட்டார்.

அவருடைய போக்கு ஹிட்லருடையதைப் போன்று சர்வாதிகாரப் போக்கு. மனித உரிமைகள், ஜனநாயகப் பிரதிநிதித்துவம்" போன்றவற்றிற்கு அவர் மதிப்பளிப்பது இல்லை. இதுவரை எத்தனை மனிதக் கொலைகள் புரியப்பட்டுள்ளன?

*தமிழ்ப் பத்திரிகையாளர்கள்:*

நீங்கள் இப்போது உங்கள் கூட்டாளிகளாக்கிக் கொள்ளப் போகும் ஜே.வி.பியினர் மனிதப் படுகொலைகளைச் செய்யவில்லையா? அதிகம் ஏன், உங்கள் விமானப் படை நவாலித் தேவாலயம் மீது குண்டு மாரி பொழிந்து நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றதே. அதை மறந்து விட்டீர்களா?

*ஜனாதிபதி:* சண்டைக்கால நிலைமை வேறு, இந்தச் சமாதான காலத்திலும் மாற்று இயக்கத்தினரையும், தமது வழிக்கு வராதவர்களையும், அரச உளவுப் பிரிவினரையும் புலிகள் கொன்று குவிக்கிறார்களே?

*தமிழ்ப்பத்திரிகையாளர்கள்:*

நடைபெற்று வரும் கொலைகளுக்கெல்லாம் நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்கிறார்கள் புலிகள். அவர்கள்தான் கொன்றார்கள் என்பதற்கு ஆதாரம் உள்ளதா?

ஜனாதிபதி பதிலளிப்பதற்கு முன்னர் ஆங்கில, சிங்களப் பத்திரிகையாளர்கள் அரசாங்கம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்கள். அரசின் போக்கை ஜனாதிபதி வன்மையாகக் கண்டித்தார். அரசுடன் ஒத்திசைவாக நடக்க தாம் முற்பட்ட போதும் அரசினர் ஒத்துழைக்கவில்லை - என்றார். அபிவிருத்தி லொத்தர் சபைப் பிரச்சினை - இது சின்ன விடயம். கவனிக்க வேண்டிய எத்தனையோ பெரிய விடயங்கள் இருக்கின்றன - என்றார் ஜனாதிபதி.

கருத்துப் பரிமாற்றங்களிலும் இராப்போசன விருந்திலும் அமைச்சர் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் அமுனுகம எம்.பி.,மங்கள சமரவீர எம்.பி. முதலானோரும் கலந்துகொண்டனர்.

## நிவாரண ஒதுக்கீடு இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.9

ஜூன் மாதத்துக்கான நிவாரண ஒதுக்கீடுகள் யாழ். செயலகத்தினால் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இன்று வழங்கப்படவுள்ளதாக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.நல்லையா அறிவித்துள்ளார்.

சகல கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குரிய வழங்கல் கட்டளைகளை இன்று செயலக புனர்வாழ்வுப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஓ-10)

## ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தொடர்பகத்தில் வசித்து வந்த சந்திரன் நிசாந்தன் ( வயது-11) என்ற மாணவனையே இவ்வாறு காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சமயசந்நிதிகளில்

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயபுனர்நிர்மாணஞ் செய்யப்பட்ட சிற்ப ரதவெள்ளோட்டம் இன்று சனிக்கிழமை பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது. (ஓ-6)

★ ★ ★

தென்புலோலி உபய கதிர்காமக்கந்தன் ஆலய இரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. மறுநாள் காலை 9மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஓ-6)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமையும் தீர்த்தத்திருவிழா மறுநாள் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஓ-31)

★ ★ ★

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ஓ-31)

# அரசின் வரைவுகளிலுள்ள வேறுபாடுகள் பற்றி பிரதமர் அளித்த விளக்கம் போதுமானதல்ல

## அமுனுகம கூறுகிறார்; வரைவை பகிரங்கப்படுத்தியது யார் எனவும் கேள்வி

கொழும்பு,ஓக.9

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசின் வரைவுகளிலுள்ள வேறுபாடுகள் குறித்து பிரதமர் அளித்த விளக்கம் போதுமானதல்ல, பிரதமரின் கருத்துக்கும் அரச பேச்சாளரின் கருத்துக்கும் இடையில் முரண்பாடு நிலவுகின்றது.

- இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் தமது விளக்கத்தின் போது ஜனாதிபதி மற்றும் நோர்வே அனுசரணையாளர் ஆகியோருக்கு ஒரே வரைவையே அரசு அனுப்பியது என்றும், நோர்வே அனுசரணையாளர் அரசுடன் கலந்தலோசித்த பின்னர் அரசின் இணக்கத்துடன் சில திருத்தங்கள் மேற்கொண்டு அந்த வரைவை புலிகளுக்கு அனுப்பிவைக்க இணங்கினார் என்றும் தெரிவித்தார்.

ஆனால், அரச பேச்சாளர் ஜி.எல். பீரிஸ் ஊடகவியலாளர் சந்திப்பின் போது 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில வெளியான வரைவே இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது எனக் கூறினார். இவ்விரு கருத்துக்களில் எது சரியானது?

நாட்டின் தலைவியான ஜனாதிபதி இடைக்கால நிர்வாகம் தொடர்பான இரகசிய வரைவை பகிரங்கப் படுத்தினார் என்று அரசு குற்றம் சாட்டுகிறது. ஆனால், அதற்கு முன்பே பத்திரிகை ஒன்றுக்கு பிரதமரின் அலுவலகத்தில் இருந்தோ, அமைச்சர் ஒருவரினூடாகவோ இந்த வரைவு கிடைக்கப்பெற்று இருக்கின்றது. இரகசிய ஆவணம் குறித்து இரகசியம் பேணும் அழகா இது? இவ்வாறு இருக்க, இடைக்கால வரைவை ஜனாதிபதி பகிரங்கப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டுவது எவ்வாறு நியாயமாகும்.

- இவ்வாறு சரத் அமுனுகம கூறினார். (எ)

# காஞ்சிரங்குடா படுகொலை சம்பவம்; பாதிப்புற்றோருக்கு விரைவில் நஷ்ட ஈடு

## சந்திரநேரு எம்.பியின் கோரிக்கைக்கு பிரதமர் இணக்கம்

காரைதீவு,ஓக.9

அம்பாறை மாவட்டத்திலுள்ள காஞ்சிரங்குடாவில் படுகொலை செய்யப்பட்ட ஏழு பேரின் குடும்பங்களுக்கும் அச்சம்பவத்தில் படுகாயமுற்றோருக்கும் நஷ்டஈடு வழங்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு பிரதமரைக் கடந்த புதன்கிழமை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசியதன் பலனாக பிரதமர் இந்த இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பிரதமரைச் சந்தித்தபோது சந்திரநேரு எம்.பி. காஞ்சிரங்குடாச் சம்பவத்தில் படுகொலையுண்டோரின் குடும்பத்தினருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்பதையும், அண்மையில மூதூர், வாழைச்சேனை போன்ற பகுதிகளில் கலவரங்களில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், மூன்று தடவைகள் இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

பிரதமர் உடனடியாக நஷ்டஈடு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தனது அலுவலக உதவிச் செயலாளர் எஸ்.பத்மநாதனைக் கேட்டுக் கொண்டார். காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் முன்னால் 09.10.2002அன்று ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்ற பொதுமக்கள் மீது படையினர் சுட்டதில் ஏழுபேர் கொல்லப்பட்டதுடன் 24 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நீதிவானின் காரை மறித்த நால்வர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஓக.9

மதுபோதையில் யாழ்.நீதிவானின் காரை வழிமறித்து அவதூறாகப் பேசியதாகப் கூறப்படும் சம்பவம் தொடர்பாக நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா நேற்றுமுன்தினம் தமது நீதிமன்றப் பணிகளை முடித்துவிட்டு திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை வீதி வழியாக வீடு திரும்பிக்கொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளை, குறிப்பிட்ட வீதி வழியாக மதுபோதையில் வந்த நான்கு இளைஞர்கள் நீதிவானின் காரை வழி மறித்ததுடன் அவரை அவதூறான வார்த்தைப் பிரயோகங்கள் கொண்டு பேசினர் என்றும் - கூறப்படுகிறது.

இதனை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த யாழ்.பொலீஸார் சம்பந்தப்பட்ட இளைஞர்களைக் கைது செய்து பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைத்தனர்.

யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி ரதீஸ்வரன் , கருணைராஜா ரவீந்திரன், இரத்தினம் செல்வநாயகம், யோகராஜா பகிராஜ் ஆகிய நால்வருமே இவ்வாறு பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

குறித்த சந்தேக நபர்கள் நால்வரையும் பொலீஸார் நேற்று யாழ். நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் இவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, சந்தேக நபர்களில் ஒருவரான யோகராஜா பகிராஜ் என்பவருக்கு எதிராக பல வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாவும் ஒரு தகவல் தெரிவித்தது. (எ-5)

## வங்கி அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஓக.9

மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று இன்றும், நாளையும் காலை 9மணிக்கு யாழ்.பல் கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'தலைமைத்துவ திறன்' என்னும் தலைப்பில் நடைபெறுகின்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி எஸ் .நடராஜசுந்தரம் மற்றும் வணிக முகாமைதத்துவ விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ-4)

# மடுமாதா திருச்சொரூப பவனி வவுனியா நோக்கிச் செல்கிறது

கொழும்பு,ஓக.9

வத்திக்கான் பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரினால் ஆசீர்வதிக்கப்பட்ட மடுமாதாவின் திருச் சொரூபம் நேற்றுக் காலை கொழும்பு, மருதானையிலிருந்து பவனியாக வவுனியா நோக்கி எடுத்துச்செல்லப்பட்டது. சர்வமத குருக்களின் நல்லாசியுடன் மருதானை பாத்திமா ஆலயத்திலிருந்து காலை 8 மணிக்கு பவனி ஆரம்பமானது.

புனர்வாழ்வு , மீள்குடியமர்வு , அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, கிறிஸ்தவ, பௌத்த, இந்துக்குருமார்கள் ஆகியோர் உரையாற்றியதையடுத்து பவனி தொடங்கியது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் திருச்சொரூபம் வைக்கப்பட்டிருக்கிறது.

பொலஸாரும், கடற்படையினரும முன்னால பாதுகாப்பு வழங்க, பிரமுகர்கள், பக்தர்கள் பின்னால் கால்நடையாகவும், வாகனங்களிலும் செல்ல பவனி பொரளை சகல புனிதவான்கள் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்டது.

# ‘ரேமினேற்றர்’ நாயகன் ஆனோல்ட் ஷ்வாஸ்நேகர் கலிபோர்னியா மாகாண ஆளுநர் பதவிக்கு போட்டி

## புஷ்ஷுக்குப் பின்னர் ஜனாதிபதியாகும் வாய்ப்பு அவருக்கு என்கிறது ஆய்வு

ஹொலிவூட் சூப்பர்ஸ்டார் ஆனோல்ட் ஷ்வாஸ்நேகர் அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாண ஆளுநர் பதவிக்குப் போட்டியிடுகிறார். இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பை ஆனோல்ட் நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.


ஷ்வாஸ்நேகர் மனைவியுடன்

‘நான் அரச பதவியை விரும்புகிறேன். இந்த நாடு என்னை ஆட்சிக்கு வரச்சொல்லும்போது - என்னைவிடச் சிறந்த ஆட்சியாளர் வேறு எவரும் இல்லை எனும்போது - நான் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் சேவை செய்வேன்’’ என்று கடந்த மாதம் அவர் தனது அரசியல் ஆசையை வெளியிட்டிருந்தார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இப்போது ஆளுநராக இருப்பவர் கிரேடேவிஸ். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இவர்மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மாகாணத்தின் பொருளாதாரமே இவரால் காலியாகிவிட்டதால், மக்கள் இவர் மீது வெறுப்பில் இருக்கிறார்கள். இப்படி மக்களால் வெறுக்கப்படும் ஒருவரைப் பதவியிலிருந்து திரும்பப்பெற அமெரிக்க சட்டத்தில் இடம் உண்டு. இதற்காக ஆயிரக்கணக் கான வாக்காளர்கள் கையெழுத்துப்போட்டுக் கொடுத்த மனு ஏற்கப்பட்டு, எதிர்வரும் ஒக்ரோபர் ஏழாம் திகதி கிரேடேவிஸை திரும்பப் பெறுவதற்கான தேர்தல் நடக்கிறது.

இந்தத் தேர்தலின்போது கூடவே புதிய ஆளுநர் தேர்ந்தெடுக்கப்படுவார். குடியரசுக்கட்சி சார்பில் இந்தப் பதவிக்கு ஆனோல்ட் போட்டியிடுகிறார். நடிகராக இருந்து அமெரிக்க ஜனாதிபதியான ரொனால்ட் றீகன் கலிபோர்னியா ஆளுநராக அரசியலில் நுழைந்து பின்னர் ஜனாதிபதியானார். அதே பாணியில் ஆனோல்ட் அரசியலில் புகுந்து ஜோர்ஜ் புஷ்ஷின் பதவிக் காலத்துக்குப் பிறகு ஜனாதிபதியாகலாம் என்ற எதிர்பார்ப்பு கிளம்பியிருக்கிறது.

ஆனோல்டுக்கு இப்போது ஐம்பத்தாறு வயது. ஆஸ்திரிய நாட்டில் பிறந்த அவர், இருபது வயதிலேயே உலக அழகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். கட்டுமஸ்தான தேகத்தோடு அமெரிக்கா வந்த அவருக்கு சுலபத்தில் ஹொலிவூட் வாய்ப்புக் கிடைக்கவில்லை. 1984இல்தான் அவருக்கு அமரிக்க குடியுரிமை கிடைத்தது. அவரைப் பேட்டி எடுக்கப்போன என்.பி.சி. தொலைக்காட்சி நிருபர் மரியா ஷ்ரைவர் அவரது கட்டுடலில் மயங்க, இருவரும் 1986 இல் திருமணம் செய்துகொண்டனர். மரியா ஷ்ரைவர் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி குடும்பத்துப்பெண்.

அடிக்கடி கல்யாணம்; நினைத்தால் விவாகரத்து; தினம் ஒரு நடிகையுடன் ஊர் சுற்றுவது என்ற ஹொலிவூட்டின் வழமைக்கு மத்தியில் பாராட்டும்படியானது ஆனோல்டின் வாழ்க்கை. பதினேழு வருடங்களாக மரியாவுடன் இனிமையான வாழ்க்கை. இவருக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள்.

குழந்தைகளிடம் அளவு கடந்த பாசம் காட்டுவது, எந்தப் பொது நிகழ்ச்சி என்றாலும் மனைவியுடனே ஆஜராகுவது என அமெரிக்கர்களின் உதாரண புருஷராக இருக்கிறார் ஆனோல்ட்.

ஆனால், மரியாவுக்கு ஆனோல்டின் அரசியல் பிரவேசம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அரசியல் காரணத்தினாலேயே இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டு, அதிர்ச்சிக்கு ஆளான தனது (கென்னடி) குடும்பவரலாறு அவரைப் பயமுறுத்துகிறது. தன் கணவர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பும் நீண்ட ஆயுளும்தான் முக்கியம் என அவர் கருதுகிறார். குடும்பத்துக்கு ஒதுக்கும் நேரத்தை அரசியல் விழுங்கிவிடும். குழந்தைகளுக்கும் ஆனோல்டுக்கும் இடையே இடைவெளி உருவாகிவிடும் என கவலைப்படுகிறார் மரியா.


இந்தியாவில் வெளிநாட்டுக் குளிர்பான வகைகளில் அளவுக்கு மீறிய நச்சுப்பொருள்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து அவற்றிற்கு எதிராக பெருமெடுப்பிலான கண்டனப் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

## கூரையில் இருந்து வீழ்ந்து அமெரிக்க வீரர் மரணம்

பக்தாத்,ஓக.9

மோசுல் நகரில் ஒரு வீட்டின் கூரை மீது நின்று கண்காணித்துக் கொண்டிருந்த அமெரிக்க வீரர் அங்கிருந்து தவறி கீழே விழுந்ததால் பலத்த அடிபட்டு இறந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடந்தது.

101 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்தவர் இவர். பிற இராணுவ வீரர்களுடன் அந்த நகரில் காவல் பணியில் ஈடுபட்டிருந்தார். ஈராக்கில் அமெரிக்க இராணுவம் காலடி எடுத்துவைத்த கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் இது வரையில் 57 அமெரிக்க இராணுவ வீரர்கள் இறந்துள்ளனர். அவர்களில் 53 பேர் சதாம் ஆதரவாளர்களின் கெரில்லாத் தாக்குதலில் இறந்தவர்களாவர்.

உலக அரங்கில்

### ஜகார்த்தா குண்டுவெடிப்பில்

# குற்றவாளியை இனங்காண டி.என்.ஏ. பரிசோதனைகள்!

ஜகார்த்தா,ஓக.9

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற ஜகார்த்தா குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் வான் சாரதி ஒருவரின் அடையாளங்களைச் சேகரிக்கும் பணியில் அந்நாட்டுப் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்திலிருந்த - சிதைவடைந்த வானுக்குள் சிதறியிருந்த - மனித உடலின் பாகங்களிலிருந்த ‘டி.என்.ஏ.’ மாதிரிகளைப் பரிசோதனைக்குட்படுத்தும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

16 பேரைப் பலிகொண்ட இந்த ஹோட்டல் குண்டுவெடிப்பின் சூத்திரதாரி மேற்படி வானின் சாரதியாக இருக்கலாம் என அவர்கள் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக அவர்கள் நேற்றுமுன்தினம் புகைப்படம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். ஓரளவு சிதைந்துபோயுள்ள இந்தப் புகைப்படம் குண்டுவைக்கப்பட்டிருந்த வானின சாரதிக்குச் சொந்தமானதாக இருக்கலாமாம்.

இதேவேளை -

இந்தோனேஷியாவின் சுதந்திர தினம் இம்மாதம் 17 ஆம் திகதி வருகின்றது.

இதனையொட்டி அந்நாட்டில் இனனும் பல தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று ஆஸ்திரேலியா எச்சரித்திருக்கின்றது.

இந்தோனேஷியப் பொலீஸார் ஜகார்த்தா குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் ஒருவரின் வரைபடத்தையும் முன்னர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வரைபடத்திலுள்ளவர்தான குண்டுவெடிப்புடன் தொடர்புடைய டொயோட்டா கிஜாங் ரக வானை வாங்கியுள்ளார் என்றும் - அவர் அந்த வானை சம்பவதினத்துக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர்தான் வாங்கினார் என்றும் - அவர் அதனை வாங்கும்போது தனது பெயர், முகவரி எதனையும் கொடுக்காது ரொக்கப்பணம் கொடுத்து வாங்கியுள்ளார் என்றும் - பொலீஸார் மேலும் கூறியுள்ளனர்.

(ம)


தெற்கு லெபனானில் இஸ்ரேலிய விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாக லெபனான் பொலீஸார் தெரிவித்தனர். தமது நிலைகளே தாக்கப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கை தொடர்ந்தால பலஸ்தீனத்தில் தாம் மேற்கொண்டு வரும் தற்காலிக போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரப்போவதாக இந்த அமைப்பு மிரட்டியுள்ளது.

# லைபீரிய ஜனாதிபதி ரெய்லர் இராஜினாமா செய்ய முடிவு

மொன்றோவியா,ஓக.9


தலைநகருக்கு வந்துள்ள நைஜீரிய அமைதிப்படையினரை வரவேற்கும் லைபீரிய மக்கள்.

லைபீரிய ஜனாதிபதி ரெய்லர் தனது இராஜினாமாவை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளார். ரெய்லரின பொறுப்புக்களை அந்நாட்டின் உப ஜனாதிபதியாகவுள்ள மோசஸ்கையேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், 14 வருடங்களாக இரத்தம் சிந்தும் கிளர்ச்சிக்கு ஒரு முடிவு காணப்படும்வரை எதற்கும் ஒத்துக் கொள்ளமாட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள கூறிவருகின்றனர்.

இது ஒரு பக்கமிருக்க, மேற்கு ஆபிரிக்க சமாதானப்படை மொன்றோவியாவில் வந்திறங்கியதில் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

“எங்களுக்கு சமாதானம் வேண்டும்; யுத்தம் வேண்டாம்” என்ற கோஷததுடன அவர்கள் படைகளை வரவேற்றனர்.

(ம)

### கொலம்பியா விண்கலத்தில் இறந்த

# விண்வெளி வீரர்களின் பெயர்களை நுண் கோள்களுக்குச் சூட்ட அனுமதி

வாஷிங்ரன்,ஓக.9

கொலம்பியா விண்கலத்தில் பயணம் செய்தபோது இறந்த இந்தியப் பெண் விஞ்ஞானி கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு விண்வெளி வீரர்களின் பெயர்கள் நுண்கோள்களுக்குச் சூட்டப்படவிருக்கின்றன.

இதற்கான அங்கீகாரத்தை சர்வதேச விண்வெளி ஆய்வு யூனியன் வழங்கியுள்ளது.

இக்கோள்களைப் பார்ப்பவர்கள் விண்வெளி வீரர்களின் தியாகத்தையும் நினைவு கூர்வர் என்று கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நரபலி கொடுக்கத் திட்டமா?

# சிறுமிகளைக் கடத்த முயன்ற சாமியார் கோவையில் கைது!

கோவை,ஓக.9

சிறுமிகளின் தலையில் ‘மை’ தடவி அவர்களைக் கடத்த முயன்றார் என்ற குற்றத்தின்பேரில் கோவையில் சாமியார் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சகாதேவராஜ் என்ற பெயருடைய அவரை மக்கள் குருஜி என்று அழைத்து வந்தனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கோவை வடபள்ளி - நவவூரில் வசித்து வந்த மேற்படி சாமியார், கீதாராணி என்ற சிறுமியை அவளது பெற்றோருக்கு உடல்நிலை சரியில்லை என்ற கூறி அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் சிறுமியின் தலையில் மை தடவி பூஜை செய்தார். அவர் தேநீர் அருந்த வெளியில் சென்ற சமயம் சிறுமி அங்கிருந்து தப்பி விட்டாள்.

இதேபோன்று மீனா என்ற சிறுமியை சாமியார் கடத்தித் தனது வீட்டுக்கு அழைத்துச்சென்றபோது சிறுமி அவரது கையைக் கடித்துவிட்டு தப்பி விட்டாள்.

பின்னர் இரு சிறுமிகளும் பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் கூறியுள்ளனர். இதன் பின்னரே சாமியார் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாமியார் கோழிகளை வெட்டி இரத்தப்பலி கொடுத்து வருபவர் என்றும் - அவர் சிறுமிகளைக் கடத்தியது நரபலி கொடுக்கும் நோக்கிலாக இருக்கலாம் என்றும் - பொது மக்கள் தெரிவிக்கின்றனர். விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.


ஈராக்கின் ரிக்றிட் நகரில் நேற்று அமெரிக்கப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து ஈராக்கிய ஆண்களும், ஒரு குழந்தையும் உயிரிழந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. அமெரிக்கப்படையினர் ஏ.கே.47 ரக துப்பாக்கியொன்றை சுட்டுப்பார்த்தபோது ஐந்து ஆண்களும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பொதுச்சந்தைப்பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சூட்டுச்சம்பவத்தில் குழந்தையொன்று உயிரிழந்தது. இந்தச் சம்பவங்கள் குறித்து அமெரிக்கப்படைத்தரப்பு உடனடியாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 21 |
| 04 | 07 |
| 1917 | 2002 |

### அமரர் ஆறுமுகம் மாணிக்கம்

(இளைப்பாறிய டாக்டர். வதிரி. கரவெட்டி)
திதி : துவாதசி–09.08.2003

கண்ணின் மணியென எமைக்
காத்து வளர்த்திட்ட பப்பாவே,
காற்றில் கரைந்து கனவாகிப் போனீரோ!
ஆண்டொன்று உருண்டோடி விட்டாலும்
உமை நினைந்து எந்நாளும்
சிந்தை கலங்கி சிந்துகின்றோம்
கண்ணீர்த் துளிகள்!
உங்கள் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

-மனைவி. பிள்ளைகள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

புதுக்கிணற்றடி, வதிரி, கரவெட்டி.

(21162) (15-19)

## விக்கிரகங்கள் திருட்டு!

வலி.வடக்கு,ஓக.9

திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள கோணேஸ்வரர் ஆலயத்தில் இருந்த ஐம்பொன்னாலான சிலைகள் மூன்று திருட்டுப்போயுள்ளன.

கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் இந்த சிலைகள் இரவு நேரம் திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. நடேசப் பெருமான் மற்றும் முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய இறை விக்கிரகங்களே திருட்டுப்போயுள்ளன. இந்தச் சிலைகள் மூன்றும் பல ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்று கூறப்பட்டது. (எ-86)


**SPOKEN ENGLISH**

Mr. Ramanathasan
ஆரம்பம்: Sat., Sun. 5 p.m.
Gr. 3 முதல் O/L வரை
**SHAMROCK**
J/EACHCHAMODDAI.

(21189) (24-15-16)



# CALL FOR PROJECT ASSISTANTS

*RBIP (RURAL BANKING INNOVATION PROJECT) GTZ*

Applications are invited from Candidates who have recently graduated to conduct a field data collection survey in the Jaffna district. The applicants should possess B.A. (Hons.) in Economics or Sociology and should be familiar with Data Collection, task this for socio-economic study.

| Duration of Project: | Monthly Remuneration : |
|---|---|
| AUGUST TO DECEMBER 2003 | Rs. 15,000/= (ON SATISFACTORY WORK) |

Send or hand over your CVs with full details to JRP Office, GTZ, Jaffna on or before 15/08/2003. Selected candidates should be ready to start work by 20/08/2003.

*Please forward your applications to:*
Ms. Nicoleen Smainathar
Consultant - RBIP, GTZ, - JRP
472, Main Street, Jaffna.

Further information regarding the type of work etc... could be obtained from:

DR. C. ELLANKUMARAN,
Senior Field Researcher, RBIP- GTZ

(21165)



உ

அனலைதீவு நயினாகுளம்



## பூரணை, புட்கலாசமேத அரிகரபுத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழா

**11.08.2003**
ஆம் திகதி
**திங்கட்கிழமை**



தேர் ஏறிவரும் ஐயன் பாதார விந்தங்களை தரிசிக்க
அடியார்கள் அனைவரும் திரண்டு வருக!
அவன் அருள் பெற்று!
சுபீட்சம் பெறுக!!

விசேடபடகுச் சேவையும், அன்னதான சபையினரின்
அன்னதானப் பணியும் சிறப்புற நடைபெறும்.

-அனலைதீவு ஐயனார் ஆலய
பரிபாலன சபையினர்.

அனலைதீவு-5.

(20904)


# GNANA (ஞானா)
## BEAUTY PARLOUR

- Bridal/ Dance make up
- Facial For different types of skin
- Bleeching
- Manicure & Pedicure
- Hair styles
- Threading
- Waxing
- Wedding cake orders will be under taken.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

162, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.
Tel- 021-222 2224, 222 3885

UTHAYAN Graphics
(15-19) C/29258



BPL

வர்ண டெலிவிஷன்கள்
சன்யோ தொழில்நுட்பத்துடன்

## நீங்கள் இதுவரை கண்டிராத காட்சிகள் !
## கேட்டிராத நாதங்கள் !





**FYR - 21" வர்ணம்**

- 1000W PMPO ஒலி
- உடனடி காட்சிகள்
- AV ஸ்டீரியோ
- ஸ்டீரியோ இரட்டை ஸ்பீக்கர்கள்



**LWR - 20" வர்ணம்**

- 40W PMPO ஒலி
- அகன்ற துல்லிய காட்சிகள்
- 100 நிகழ்ச்சிகள்
- VMT-DVD/LD/VCD



**KSR - 14" வர்ணம்**

- 16W PMPO ஒலி
- 100 நிகழ்ச்சிகள்
- ஹைப்பர்பேண்ட் கேபிள்
- AV IN

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:
## சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10, தொலைபேசி: 324261- 5, 357283-5, 431770

விநியோகஸ்தர்: நாராயணா ஹாட்வெயார்ஸ் டிரேடர், யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:
V.K. ராஜரட்னம் & சன்ஸ், யாழ்ப்பாணம். N.S.A எலக்ரோனிக், யாழ்ப்பாணம்.
கரண் வோச் & ரேடியோ, யாழ்ப்பாணம். ஹீரோ சுப்பர் கொம்பலக்ஸ், நெல்லியடி.
SKY எலக்ரோனிக்சிஸ்டம்ஸ், யாழ்ப்பாணம். ராஜன் சைக்கிள் வேர்க்ஸ், பருத்தித்துறை.

உதயன்

## அழியும் ஆங்கிலக் கல்வி!

ஆங்கில பாடம் கற்பித்தலும் கற்றலும் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்து பெற்றோரும், கல்விமான்களும் விசனம் தெரிவித்து வருகின்றனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளிலேயே இக்குறைபாடு பெரிதும் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அறுபதுகளுக்கு முன்னர் ஆங்கில மொழியில் தமது கல்வியைக் கற்ற ஒரு சமூகம் கல்விப் போதனை உலகிலிருந்து பெரும்பாலும் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டது. சுயமொழியில் கல்வி பயின்ற தலைமுறையே இன்று பாடசாலைகளில் கற்பத்தல் பணியை முற்றாகப் பொறுப்பேற்றிருக்கும் சூழலில், அந்நிய மொழியான ஆங்கிலம் நமது சமூகத்திலிருந்து மேலும் அந்நியப்பட்டுப்போவதை யதார்த்தத்தில் காண்கின்றோம்.

அந்நிய மொழி நமது சமூகத்துக்கு அவசியமா, இல்லையா என்ற சர்ச்சைகள் ஒருபுறம் இருக்கட்டும். பட்டப்படிப்புக்கும், பட்டப்பின் படிப்புக்கும் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்வி, உயர் நிபுணத்துவப் பயிற்சி, அறிவுவிருத்தி போன்றவற்றுக்கும் ஆங்கில அறிவு அவசியமானதாகின்றது. அதுவும் 'தகவல் தொழில்நுட்பம்' என்ற கணனி யுகத்துக்குள் முழு உலகமுமே தீவிர பாய்ச்சலோடு நுழைந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில், நமது சமூகம் ஆங்கில அறிவின்மையினால், சர்வதேச உலகின் முன்னேற்ற நகர்வில் ஒதுக்கப்பட்டு, பின்தள்ளப்படும் ஆபத்து உள்ளது.

இந்த வகையில் ஆங்கில மொழியில் அடிப்படை அறிவை நமது சமூகம் பெற்றிருப்பது இன்றியமையாததாகிறது.

ஆங்கிலக் கல்வி கற்றல், கற்பித்தல் வீழ்ச்சி அடைந்து செல்வதற்குத் தேசிய கல்வி நிறுவனம் மீது முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது.

★ கற்பித்தல் முறையை அடிக்கடி மாற்றி, குழப்பத்தை ஏற்படுத்துதல்.

★ நமது நாட்டுக்குப் பொருத்தமில்லாத கல்வி முறையை நமது மாணவர்கள் மீது திணித்தல்

★ உரிய ஆங்கில அறிவு இல்லாதவர்களை எழுந்தமானமாக ஆங்கிலம் போதிக்க நியமித்தல்.

★ நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கற்பித்தலுக்கான அடிப்படைப் பயிற்சிகள்கூட வழங்காதிருத்தல்.

★ திறமைமிக்க ஆங்கில ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றால், ஓய்வின் பின்னரும் அவரது சேவையை சமூகத்துக்குப் பெற்றுக்கொடுக்க முயற்சி எடுக்காதிருத்தல்.

- இவை போன்ற இன்னோரன்ன வழிகளில் தவறுகள் இழைக்கப்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆங்கிலக் கல்வி போதனைக்கு பிரிட்டிஷ் நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று, அதை நமது ஆசிரியர்கள் மூலம் திணித்து, நடைமுறைப்படுத்தத் தீவிரம் காட்டப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பிரட்டனில் உள்ள மாணவர்கள் ஆங்கில மொழிச் சூழலில் வாழ்கிறார்கள். அவர்களின் தாய்மொழி ஆங்கிலம். ஆனால், நமது நாட்டில் 95 வீதமான மாணவர்கள் தமது தாய்மொழிப் பின்னணியிலேயே வாழ்கிறார்கள். அவர்கள் மீது பிரித்தானிய நடைமுறையை அப்படியே சுமத்த முற்படுவது பயன் தருமா என்று சம்பந்தப்பட்டோர் கேள்வி எழுப்புகின்றனர்.

பெரும்பாலும் தேசிய கல்வி நிறுவனம் ஆங்கிலப் பாடப்புத்தகங்களை அறிமுகப்படுத்தும்போது இலங்கை மாணவர்கள் வாழும் சூழலையோ, அவர்களின் வாழ்க்கை முறையையோ சிந்திப்பதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆங்கில மொழியில் கற்பித்தலுக்கான தேர்ச்சியோ, பயிற்சியோ இல்லாதவர்கள் - அவர்கள் ஜ.ச.ஈ.சாதாரண தரததல ஆஙகலப பாடததல திறமைச் சித்தி பெற்றவர்கள் என்ற தகைமையுடன் - ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, நேரடியாக கற்பித்தலுக்காக வகுப்புகளுக்கு அனுபபபபடுகனறாாகள. ஆசரயா பயறசக கலாசாலையில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியைக் கிரகிப்பதற்கான அடிப்படை ஆங்கில அறிவு கூட இவர்களில் பலருக்கு இருப்பதில்லை என்றும் கூட கூறப்படுகின்றது.

இத்தகைய குளறுபடிக்ளுக்குள் சிக்கித் தவிக்கும் ஆங்கிலக் கல்விப் போதனைக்கு விடிவு கிட்டுவது எங்ஙனம்? கல்வியாளர்கள், புத்திஜீவிகள் அவசரமாகச் சிந்தித்து, ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய விடயம் இது.

# தொழிலாளர்களின் உரிமையை மறுக்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை

## தொழில் திணைக்கள அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். மாவட்டத்தில் தொழிலாளர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் செயற்படும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.முத்துக்குமாரசாமி எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் நிறுவனங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்கள், இன்று அரச ஊழியர்களை விட அதிகம் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இவ்வாறு உரிமைகள் மறுக்கப்படும் தொழிலாளர்கள் எமக்கு முறைப்படி முறைப்பாடு செய்தால் அவர்கள் பணியாற்றும் நிறுவன நிர்வாகம் மீது சரியான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் மூலம் அப்பணியாளரின் உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

இலங்கையில் தொழிலாளர் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் மாவட்ட மட்டத்திலான தொழில் நீதிமன்றம் யாழ். மாவட்டத்தில் இயங்காமை கவலைக்குரிய விடயமாகும்.

எனினும், தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களின் நலனுக்கு ஊறுவிளைவிக்கப்பட்டால் அது தொடர்பாக எம்மிடம் முறைப்பாடு செய்யலாம். நாம் நடவடிக்கை மேற்கொண்டு அவரது குறையைப் போக்குவோம். இதற்காக நீதிமன்றத்தின் உதவியைக் கூட நாடுவதற்கு எம்மால் வழி ஏற்படுத்திக் கொடுக்கமுடியும்

தொழிலாளர் நலன் தொடர்பாக எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பலவும் ஆளணிப் பற்றாக்குறையால் முடங்கியுள்ளன.

எமது அலுவலகத்தில் பத்துத் தொழில் உத்தியோகத்தர் கடமையாற்றவேண்டிய இடத்தில் இன்று ஒரேயொரு உத்தியோகத்தரே கடமையாற்றுகிறார்.

இதனால், தொழிலாளர் உரிமைகளையும், அவர்களது தொழில்சார் நடவடிக்கைகளையும் கண்காணிக்க முடியாதுள்ளது.

அண்மைக்காலமாக பிற மாவட்டங்களில் தொழில் வழங்கும் செயற்பாடுகள், அவற்றைக் கண்காணித்தல் என்பன சிறப்பாக இடம்பெற வழிசெய்யப்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு நிலை யாழ். மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும் - என்றார் அவர் (ஒ-9-12)

# ஓய்வூதியப் பணிகள் அனைத்தும் இனிப் பிரதேச செயலகங்களில்!

## யாழ். செயலகக் கிளை மூடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.9

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான சகல நடவடிக்கைகளையும் இனிமேல் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான அலுவல்களுக்கு பொதுமக்கள் யாழ்செயலகத்துக்கு வரவேண்டிய தேவை ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டுமுதல் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பணிகள் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும், இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களது கொடுப்பனவுகள், வெளிநாடுகளில். இருந்து வந்துள்ள ஓய்வூதியர்களது கொடுப்பனவுகள், நிலுவைக் கொடுப்பனவுகள் தொடர்பான பணிகளை யாழ். செயலகத்தில் உள்ள ஓய்வூதியக் கிளையே மேற்கொண்டு வந்தது.

ஆனால், இப்போது அந்தப் பணிகளையும் பிரதேச செயலகங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் ஓய்வூதியர்கள் தமது பிரச்சினைகளை பிரதேச செயலகங்களில் உள்ள ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொண்டு தீர்த்துக்கொள்ள முடியும். மேலதிகமாக ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினரே யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டு அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள்

இதேவேளை

ஓய்வூதியம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து யாழ். செயலகத்தில் இயங்கிவந்த ஓய்வூதியக் கிளை மூடப்பட்டது. (ஒ-8)

## நல்லூர் ஆலய வீதிகளில்
# பிரதட்சணம் செய்வோர் தோல் நோயால் பீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஆலய வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்து வருபவர்கள் ஒருவகையான தோல் நோய்க்கு உள்ளாகி வருவதாகத் தெரியவருகிறது.

ஆலய உற்சவம் தொடங்கி சில நாள்களே ஆகியுள்ள நிலையில் நாளாந்தம் அங்கப் பிரதட்சணம் செய்து வருபவர்களே இந்நோய்க்கு உள்ளாகி உள்ளதாகக் கூறுகிறார்கள்.

கடந்த வருட உற்சவத்தின்போதும் ஆலய வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்தவர்கள் இத்தகைய நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாநகர சபையினர் அப்போது இந்நோய் அங்கப் பரதட்சணம் செய்பவர்களை தாக்கா வண்ணம் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இத்தோல் வியாதியால் உடலில் சிவந்த நிறத்தில் பருக்கள் தோன்றுவதுடன் சொறிவும் இருப்பதாகக் கூறப்பட்டது. (ஒ-86)

# வலி. தெற்குப் பகுதியில் உள்ள கொல்களத்தால் துர்நாற்றம்

வலி.வடக்கு,ஓக.9

வலி.தெற்கு பிரதேச சபைப் பிரிவில் உள்ள கொல்களத்தல் இருந்து வீசும் துர்நாற்றம் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதியில் அமைந்துள்ள கொத்தியாலடி மயானத்திற்கு அருகில் இக்கொல்களம் அமைந்துள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபை சுகாதார ஊழியர்களால் சேகரிக்கப்படும் கழிவுகள் இப்பகுதியிலேயே கொண்டுவந்து கொட்டப்படுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக மயானத்திற்கு இறுதிக் கடமைகளை நிறைவேற்றச் செல்பவர்களும் அவ்வீதியால் பயணம் செய்பவர்களும் துர்நாற்றத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை -

காற்று வீசும் திசையில் அமைந்துள்ள குடியிருப்புகளில் உள்ளவர்களும் இந்தத் துர்நாற்றத்தால் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலைமையும் காணப்படுகின்றது. (ஒ-86)

### நாளை

ஆடி 25
ஞாயிற்றுக்கிழமை
(10.08.2003)
திதி : திரயோதசி
பிற்பகல் 1.15 வரை
நட்சத்திரம்: பூராடம்
முற்பகல் 9.09 வரை
சுபநேரம்: 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மறுக்கவில்லை என்பதறகாக கழுதை மீது அதிக சுமை ஏற்றுபவன் இறுதியில் கழுதையையே இழக்கநேரிடும்.

# மடு யாத்திரிகர்களுக்கான பாதை ஒழுங்கு அறிவிப்பு

மன்னார்,ஓக.9

மடு தேவாலயம் செல்லும் யாத்திரிகர்களுக்கான பாதை ஒழுங்கு குறித்து தேவாலய பரிபாலகர் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

மடு வீதியில் அமைந்துள்ள யாத்திரிகர்கள் உள்நுழையும், வெளிச்செல்லும் வாயில், வருடம் முழுவதும் ஞாயிறு தினங்கள், விடுமுறை நாள்கள் உட்பட காலை 6மணி தொடக்கம் மாலை 6மணிவரை திறக்கப்பட்டுள்ளது. இப்பாதை நாளை முதல் மாலை 10மணிவரையும், எதிர்வரும் 14ஆம் திகதி காலை 6மணி தொடக்கம் நாள் முழுவதும் இரவுபகலாகவும் 15ஆம் திகதி இரவு 10மணிவரையும் திறக்கப்பட்டிருக்கும்.

தனியார் அல்லது வாடகை வாகனங்களில் மடுவுக்கு வருவோர் மடு றோட் பொலீஸ் சோதனை நிலையத்திலும், விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்திலும் யாத்திரிகர்களின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கம், முகவரி அடங்கிய மூன்று பிரதிகள் (எல்லோருக்கும் பொதுவாக ஒருவரின் முகவரி போதுமானது) ஆகியவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும். இந்த ஆவணத்தின் மேல் சாரதியின் பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவரி, வாகனத்தின் இலக்கம், பதிவு இலக்கம், வாகன வகை, செசி இலக்கம், எஞ்சின் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட வேண்டும். யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான எல்லா வகை உணவுப் பொருள்களையும் எடுத்துச்செல்ல முடியும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு வலயம் காரணமாக
# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியை புனரமைக்க முடியவில்லை

## நிர்வாக அலுவலர் தெரிவிப்பு

தெல்லிப்பழை மாவட்ட மருத்துவமனையை சொந்த இடத்தில் இயக்குவதற்கான மீள் கட்டுமானப்பணிக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், பாதுகாப்பு வலயம் காரணமாக கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை வைத்தியசாலையின் நிர்வாக அலுவலர் க.பாலசுந்தரம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் கட்டடங்களை மீளக் கட்டிப் புனரமைத்து செயற்படவைக்க சுகாதார அமைச்சு அனுமதியையும் நிதி ஒதுக்கீட்டினையும் வழங்கியுள்ளது. ஆனால், இப்பணியைச் செயற்படுத்த பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதி வழங்கவில்லை. இதனால் வைத்தியசாலையை சொந்த இடத்தில் மீள இயங்க வைக்க முடியாதுள்ளது.

வழங்கப்பட்ட நிதியை அதற்குரிய கால எல்லை முடிவதற்குள் பயன்படுத்தி கட்டட வேலைகளை செய்தாகவேண்டும். ஆனால், உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் படையினரின் கடும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு வேலைகளை மேற்கொள்ள கட்டட ஒப்பந்தகாரர் எவரும் முன்வரவுமில்லை.

இதேவேளை, வாரத்தில் இருமுறை பழைய வைத்தியசாலையில் நடைபெறும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்குக்கூட படையினரின் கடும் கட்டுப்பாடுகள் காரணமாக நோயாளிகள் சென்றுவரத் தயங்குகிறார்கள். இதனால், பல நோயாளிகள் முறையாக கிளினிக்குகளுக்கு வருவதில்லை.

இவ்விடயம் குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பல்வேறு அறிக்கைகளையும் கோரிக்கைகளையும் விடுததும் இதுவரை எந்த சாதகமான பதிலும் பெறப்படவில்லை என்றார் அவர். (ஒ-150)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் சந்தியில் இருந்து சுமார் 200யார் தூரத்தில் காங்கேசன் துறை வீதி அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேச் லேன், மாதா கோயில் அருகில், மல்லாகம்.(சி-29364)

முச்சக்கரவண்டி (ஓட்டோ) பட்டர் கலர் பஜாஜ் HH-XXXX தொடரிலக்கமுடையதும், தற்போது பாவனையில் உள்ளதுமான CANON 1215 போட்டோ பிரதி இயந்திரமும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6079254 (21210)

## பூக்கன்றுகள் விற்பனைக்கு

பாம்ஸ் ஜந்தூரியம் (சிவப்பு), மஞ்சள கொடிப்பூ, முசந்தாஸ் (சிவப்பு, பிங்), எவகிறீன், அடுக்கு நந்தியாவெட்டை, செவ்வரத்தை (மஞ்சள் அடுக்கு), ஸ்பொஞ்பிளவர், ரோஜா, ஈரபபலா, ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C இற்கு அண்மையில்) (21058)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg - 160/-. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2)பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். 3) மீன் சந்தை முன்பாக சுன்னாகம். (21120)

## தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர், பிறவுண் வீதி, கொக்குவில் விரும்பத்தக்கது. தொடர்பு: 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (21169)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த France இல் பிரஜாவுரிமை பெற்று தொழில்புரியும் 29 வயதுடைய செவ்வாய்க்குற்றமுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய, மெல்லிய தோற்றமுடைய மணப்பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகள் ஸ்பொன்சரில் அழைத்துச் செல்லப்படுவார். தொடர்பு: விளம்பர இல.1975, மே.பா உதயன். (21059)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1978 இல் பிறந்த, அச்சுவினி நட்சத்திர 4ஆம் பாதம், அழகிய மணமகளுக்கு தற்போது வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திருக்கும், வரவிருக்கும் P.R. உடைய பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: 222 2560 (21196)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கார்த்திகை நட்சத்திரம், 81 பாவம், 32 வயது, 5 அடி உயரமுள்ள மணமகளுக்குப் பெற்றோர் வெளிநாட்டுப் பிரஜாவுரிமை உடைய, தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு: 0777 470065, 01 675669 (21006)

## இசைக்குறிப்புகள்

ஒகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புக்கள் (பாகம் 1-12) வெளிவந்துள்ளன. தொடர்பு: 75, கோயில் வீதி ,(நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து 500m தெற்கே). T.P.: 0777 031293 (பதிவுத் தபாலிலும் பெறலாம்)(21164)

## தவறிவிட்டது

வளலாய், அச்சுவேலி என்னும் முகவரியுடைய தவயோகராஜா விஜயதாஸ் என்பவரது தே.அ.அ.(இல. 800022827V), வி.அ.அ.(0903005644) மற்றும் ரஜனிகாந்தினி என்பவரது வி.அ.அ.(0907005809) என்பன 29.07.2003 அன்று அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தவிஜயதாஸ், குட்டியப்புலம், வசாவிளான் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (21207)

4ஆம் வட்டாரம், நயினாதீவு என்னும் முகவரியைச் சேர்ந்த பரராசசிங்கம் உமாசுதன் என்பவரது தே.அ.அ. (732880348V) 29.06.2003இல் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்றத்தன்று ஆலய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21204)

சாவகச்சேரி, கரன் ஆட்ஸ், கனகரத்தினம் என்பவரது Bag ஒன்று முகமாலை இராணுவ சோதனை நிலையத்துக்கு அண்மையில் 30.07.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி-29385)

### வீடு விற்பனைக்கு

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அண்மையில்
6 1/4 பரப்புக் காணியும(கூரை திருத்தவேலைகள்செய்யவேண்டிய)
வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
ஜோதி மஹால்
சூராவத்தை,
சுன்னாகம்.
(12-13-16) (21074)

## கோழிக்குஞ்சு விநியோகம

Prima, Broiler குஞ்சுகள் விலை 45/-, சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை 15/-, 18.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். 18.08.2003 பேட்டுக் குஞ்சுக்கு பதிவுசெய்தவர்கள் உடனடியாக எங்களைச் சந்திக்கவும். தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21198)

## கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். மத்திய கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினால் நடத்தப்படும் இலவச கண் சிகிச்சை முகாம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-6)

## டிப்ளோமா மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்வியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு இரண்டாம் வருட மாணவப் பிரதிநிதி கேட்டுள்ளார். (ஒ-6)

## நெஞ்சை விட்டகலா 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 - 10 - 1939



மண்ணின் மடியில் 09 - 08 - 1993

அமரர்

### சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

பாசமுடன் எம்மை வளர்த்த பரிவான அப்பாவே!
நேசமுடன் எம்வாழ்வை வளமாக்கி வைத்தீரே!
வாடி நிற்கின்றோம் வண்ணமுகம் காணாமல்
சிறகிழந்து தவிக்கின்றோம் மீண்டும் வரமாட்டாரயோ?
பாவிகளாய் இப்பாரினில் பரிதவித்து நிற்கின்றோம்
வான் வீட்டுப் பறவையாக வாழ்கின்ற அப்பாவே!
வாழ்த்திடுவீர் எம்வீட்டு நினைவோடு.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கும் மற்றும் சுவிஸ், ஜேர்மன், பரிஸ் தேவாலயங்களிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் அன்பால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி, மச்சாள்மார், மச்சான்மார்.

*"தந்தை இல்லம்"*
*லோட்டன் வீதி,*
*மானிப்பாய்.* (21193) (24-13-16)

# ஆயுத விற்பனையில் ஈடுபட்டதாக தப்பியோடிய சிப்பாய் கைது!

## பேனா உருவத் துப்பாக்கி மீட்பு

கொழும்பு,ஓக.9

பேனா உருவிலான கைத்துப்பாக்கிகளைத் தயாரித்து பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விற்பனை செய்துவந்த நபரொருவர் கடவத்தைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்று கூறப்படுகின்றது.

கைத்துப்பாக்கியுடன் கூடிய 4 ரவைகளுடன் எண்டேரிமுல்லையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ஒருவர் வழங்கிய தகவலின் பேரிலேயே இந்த முன்னாள் சிப்பாய் கைதுசெய்யப்பட்டதாகவும் -

இவர் கைதுசெய்யப்படும்போது பேனா உருவிலான துப்பாக்கி ஒன்றும் 49 மில்லிமீற்றர் ரவைகளும் அவரிடம் இருந்ததாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரோடு கூட்டாகச் செயற்பட்ட மற்றுமொரு தப்பியோடிய சிப்பாயை பொலீஸார் தேடிவருகின்றனர்.

பாதாள உலகக் கோஷ்டியினருக்குத் தேவையான துப்பாக்கிகளை குறிப்பாகப் பேனா வடிவிலான துப்பாக்கிகளைக் தயாரித்து இவர் விற்பனைசெய்து வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதாள உலகக்கோஷ்டியொன்றின் தலைவருக்கு விற்பதற்கென இவர் வைத்திருந்த பேனா உருவிலான துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வகைத்துப்பாக்கியொன்று 9 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-8)

## கவிதைப் போட்டியில் யாழ்.கவிஞருக்கு சிறப்புப் பரிசு

யாழ்ப்பாணம்,ஓக.9

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் பவளவிழாவையொட்டி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் புத்தூர் வே.இளையகுட்டி சிறப்புப் பரிசு பெற்றுள்ளார்.

இதற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-10)

## வீடு, தோட்டம் விற்பனைக்குண்டு

1. யாழ். வீதியில் 3பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு.
2. கச்சேரி நல்லூர் வீதியில் இரண்டு அடுக்குகளையும், நிலவறையும் கொண்ட 4000 சதுர அடி விஸ்தீரணமுள்ள மாடி வீடு 6 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு மூன்றாவது மாடி கட்டத்தக்க தள அமைப்புக் கொண்டது. இதைவிட தனியானதொரு கட்டடமும் உள்ளது.
3. பளையில் 30 ஏக்கர் தென்னந்தோட்டமும் ஓரளவு சேதமடைந்த வீடும் நல்ல கிணறும் கொண்ட தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **சிவராஜா** அல்லது **மகா**
151, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.
(21132) (24-13-16) **T.P. 077-7116695.**

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை துரையப்பா

(தொண்டமானாறு)

நடுத்தெரு, தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை துரையப்பா அவர்கள் 07.08.2003 வியாழக்கிழமை தனது நூறாவது வயதில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரராஜா, கனகசுந்தரராஜா மற்றும் கனகேஸ்வரி, தங்கேஸ்வரி, செல்வசுந்தரராஜா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பாலத்தடி,*
*தொண்டமானாறு.* (21209) (24-13-16)

தகவல்:
ம.பரமேஸ்வரி (மகள்).

## சுந்தரலிங்கம் வித்தியானந்தன்

(முகுந்தன்)

யாழ்., கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் வித்தியானந்தன் அவர்கள் 05.08.2003 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் முன்னாள் நாரந்தனை கிராமசேவையாளர் இ.சுந்தரலிங்கம் - யாழ். கலட்டி பாடசாலை ஆங்கில ஆசிரியை சு.பத்மாவதி ஆகியோரின் இரண்டாவது அன்பு மகனும் நந்தன் (பிரான்ஸ்), ராஜி (பிரான்ஸ்), வித்தி (பிரான்ஸ்), திருமதி கேதீஸ்வரன் (ஆத்திசூடி வீதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.08.2003 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*154/6, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.கேதீஸ்வரன்.

பிரான்ஸ் முகவரி:
*Mr.R.SUNDARALINGAM,*
*10 RUE DES PYRENEES,*
*78711 MANTES LA VILLE, FRANCE.*
(21197) (24-13-16)

## திருமதி தங்கத்திரவியம் குலவீரசிங்கம்

(குலவீர ஆச்சி - சங்கரத்தை)

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தங்கத்திரவியம் குலவீரசிங்கம் 07.08.2003இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இலட்சுமி (புத்தூர்), சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வேலுப்பிள்ளை (மாவிட்டபுரம்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தம்பித்துரை (சங்கரத்தை) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (08.08.2003) வெள்ளிக்கிழமை வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(வலி.மேற்கு பிரதேச சபை,*
*சுழிபுரம்).* (21208) (24-13-16)

தகவல்:
க.கமலவேல்.

## மல்லாகம்/தெல்லிப்பழை லயன்ஸ் கழகம்

We Serve

நடத்தும்

### விசேட இலவச மருத்துவ முகாம்

காலம் : நாளை (10.08.2003) ஞாயிறு காலை 8.00 மணிமுதல்
இடம் : மல்லாகம் மகாவித்தியாலயம், மல்லாகம் சந்தி

இவ்விசேட மருத்துவ முகாமில் சகல மருத்துவத் துறைகளைச் சேர்ந்த பின்வரும் அனுபவமிக்க சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் சேவையாற்றவுள்ளனர்:-

1) டாக்டர் G.பவானி(V.O.G) (மகப்பேற்று நிபுணர்) 2) டாக்டர் சயந்தன்(M.B.B.S.) 3) டாக்டர் நிமலராஜன் (M.B.B.S.) 4) டாக்டர் யூடி(M.B.B.S.) 5) டாக்டர் உருக்குமணிராஜா(M.B.B.S.) 6) டாக்டர் ஜெயந்தி சேனாதிராஜா(M.B.B.S.) 7) டாக்டர் சத்தியநாதன்(M.B.B.S.) 8) டாக்டர் சோதிநாதன்(M.B.B.S.) 9) டாக்டர் நவமலர் கனகரத்தினம்(M.B.B.S.)

இம்முகாமில் கொழும்பு மாவட்டத்தில் பிரபல்யமான 'மெடிகுவிக்' (MEDI QUICK) ஸ்தாபனத்தினரின் நடமாடும் (Mobile) ஆய்வுகூடச் சேவையின் மூலம் குறிப்பாக இரத்தத்தில் கொழுப்பு / சீனிச்சத்து போன்ற பரிசோதனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

*குறிப்பு* :- தேவைப்படும் மருந்து வகைகள் இலவசமாக வழங்கப்படும். வலிகாமம் வடக்கு மற்றும் அண்டிய பகுதி வாழ் மக்களைப் பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் பா.ஸ்ரீபாஸ்கரன்
கழகத் தலைவர்.

லயன் டாக்டர் உருக்குமணிராஜா
செயலாளர்.

(21203) (22-24-13-16)

### தேசிய கல்வியியற் கல்லூரிகளின்

# ஆசிரிய பயிலுநர் அனுமதிக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை

## பீடாதிபதி தி.கமலநாதன் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.9

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2004ஆம் ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு விண்ணப்பிப்போர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் விளக்கக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2004ஆம் ஆண்டுக்கான, தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய பயிலுநர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 01.08.2003இல் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் இதற்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 01.09.2003 ஆகும்.

கடந்த காலங்களில் மாணவர்களது விண்ணப்பங்களில் ஏற்படும் சிறிய தவறுகளால் அவர்களது அனுமதிக்கான சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டன. விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தியாக்கும்போது அதில் அதிகூடிய கவனமெடுத்தல் வேண்டும். மற்றவர்களைக் கேட்டோ அல்லது வர்த்தமானியில் உள்ள விளம்பரத்தினை அரைகுறையாகப் படித்தோ அல்லது வேறொருவரைக் கொண்டோ விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தியாக்கக் கூடாது.

முதலில் வர்த்தமானி அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படித்து தெளிவாக விளங்கிக்கொள்ளல் வேண்டும். விளக்கம் குறைவாக இருக்குமானால அது தொடர்பான தெளிவுள்ள ஒருவரை நாடி விளக்கத்தைப் பெறவேண்டும். அல்லது கல்வியியற் கல்லூரியொன்றுடன் தொடர்புகொண்டு சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை நன்றாகப் படித்து அங்கு என்ன தகவல்கள் கேட்டுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

வர்த்தமானி விளம்பரத்தைப் படித்து அதில் எந்தத்துறைக்கு நீங்கள் பொருத்தமானவர் என்பதை முடிவு செய்துகொள்ளவேண்டும். ஒருவர் மூன்று துறைகளைத் தெரிவுசெய்து கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றில் முதலில் பென்சிலால் நிரப்பத் தொடங்குதல் வேண்டும்.

பெயர், சுட்டிலக்கம் போன்றவற்றை ஜி.சீ.ஈ.(உ/த),ஜி.சீ.ஈ.(சா/த) சான்றிதழ்களில் உள்ளது போன்று எவ்வித மாற்றமுமின்றி எழுதுதல் வேண்டும்.

கடந்த காலங்களில் மாணவர்கள இவற்றை எழுதும்போது விட்ட தவறுகளால் நேர்முகப் பரீட்சைப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் இல்லாது போயுள்ளது.

நேர்முகப் பரீட்சைப் பட்டியல்கள், விண்ணப்பப்படிவம், அதிலுள்ள பெயர், சுட்டிலக்கம் என்பவற்றை பரீட்சைத் திணைக்களத்திலுள்ள பெறுபேறுகளுடன் ஒப்புநோக்கி கணனி மூலம் தயாரிக்கப்படுகின்றன. இதனால் அவற்றில் தவறுகள் இடம்பெறும்போது கணனி தவறான விண்ணப்பங்களை நிராகரித்துவிடும். எனவே, விண்ணப்பதாரிகள் மேற்சொன்ன விடயங்களில் விடுகின்ற சிறிய தவறும் பாதிப்பினைத் தரும் என்பதை நன்றாக உள்வாங்கிச் செயற்படவேண்டும்.

உதாரணமாக பெயர் எழுதும்போது பெயரில் ஏதாவது எழுத்தைத் தவறவிடுதல் அல்லது மாற்றி எழுதுதல், சுட்டிலக்கத்தில் சில எண்களைத் தவறவிடுதல் அல்லது மாற்றி எழுதுதல் போன்ற தவறுகள் காரணமாக கடந்த காலங்களில் கணனியால் நிராகிகப்பட்டு பல விண்ணப்பதாரிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, இவ்விடயத்தில் விண்ணப்பதாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதுபோன்ற விண்ணப்பதாரியின் பிறந்த திகதி, முகவரி, ஆகியன சரியான முறையில் எழுதப்படவேண்டும்.

விண்ணப்பம் நிரப்பி முடிந்ததும் திரும்ப மிகக்கவனமாக சரிபார்க்கப்படவேண்டும். விண்ணப்பத்தில் அனைத்துக் கூடுகளும் நிரப்பப்பட்டுள்ளனவா என்று உறுதி செய்யப்படவேண்டும். பொருத்தமில்லாத கூடுகளில் பொருத்தமில்லை என்று எழுதப்பட வேண்டும். குறிப்பிட்ட முடிவு திகதிக்கு முன் விண்ணப்பம் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல்வேண்டும். இறுதிநாள் வரை காத்திராமல் நேரகாலத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படுவதுடன் பதிவு செய்த பற்றுச் சீட்டை பத்திரப்படுத்தி வைத்திருத்தல்வேண்டும்.

இதுதவிர யாழ்ப்பாணம், தேசிய கலவியியற் கல்லூரியில் இவ்வாண்டு விசேட கல்விக்கான பாடத்துறையில் மாணவர்கள் பயிற்சி பெறவுள்ளனர். இக்கல்வித்துறையானது இன்றைய எமது சூழலில் மிகவும் அவசியமான தொன்றாகும் - என்றுள்ளது. (ஒ-8)

### நல்லூர் ஆலயச் சூழலில்

கொழும்புத்துறை.ஓக.9

நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்று வரும் உற்சவகால தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று மாலை 6மணிக்கு 'கந்தனின் திருவிளையாடல்' என்னும் பொருளில் செல்வன் பரமகுருசாமி ஜயந்தனின் சொற்பொழிவு இடம் பெறும். (ஒ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.9

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் வி.வடிவாம்பிகையின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம்- எம்.லோகேந்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஒ-10)

### யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள

# தென்னை வளத்தை மேம்படுத்த அரசு உதவி வழங்குவது அவசியம்!

## பிரதமருக்கு தெங்கு செய்கையாளர் மகஜர்

யாழ்ப்பாணம்,ஓக.9

வடக்கில் யுத்தத்தால் பாதிப்படைந்த தெங்குப் பயிர்ச்செய்கையை மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று வலியுறுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் தென்னைப் பயிர்ச்செய்கை மோசமாகப் பாதிப்படைந்துள்ளதை முதற்றடவையாக கடந்த 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு பிரதமராகத் தாங்கள் பதவி ஏற்ற பின்னர் நினைவூட்டல் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தோம். ஆனால், இதுவரை எதுவித நடவடிக்கையும் இது சம்பந்தமாக மேற்கொள்ளவில்லை. இது தொடர்பாக கடிதப் போக்குவரத்துகள் தொடர்கின்றனவே தவிர முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி பகுதிகளில் தெங்குப் பயிர்ச்செய்கை ஜீவாதாரத் தொழிலாக உள்ளது. தெங்குப்பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்த காரணத்தால் தொழிலாளர்கள் பெரும் அவலத்தை எதிர்கொள்கின்றார்கள்.

மேலும் யுத்த காலத்தில் முகாம்கள் அமைப்பதற்கென சுமார் 5லட்சம் தென்னை மரங்கள் படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அழிவடைந்த இந்தத் தென்னை வளத்தை மீண்டும் உருவாக்க பெருந்தொகை தேவைப்படுகிறது. ஒரு தென்னைமரம் முழுமையாக வளர்ந்து பயன்தரும் காலம் வரை ஐயாயிரம் ரூபா செலவாகும்.

ஒரு தென்னை மரம் 60 முதல் 70வருடங்கள் வரையும் பயன்தரும். அக்காலத்தில் 22 ஆயிரத்து நானூறு ரூபாவரை வருமானம் பெற முடியும். இத்தகவல்களைத் தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்திருக்கின்றது.

எனவே, அழிக்கப்பட்ட தென்னை மரங்களை மீள் நடுகைசெய்து பயன் பெறுவதற்கு பெருந்தொகைப் பணம் அவசியமாகிறது. யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ள தெங்குப் பயிர்ச்செய்கையை மீளப் புனரமைக்க 5வருடத் திட்டம் ஒன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்திட்டத்தின் கீழ் 2ஆயிரம் ஹெக்டேயர் காணியில் தென்னங்கன்றுகள் நடுதல் -

இதில் அழிவுறும் கன்றுகளுக்குப் பதிலாக நடுவதற்காக நாற்றுமேடைகளில் தென்னங்கன்றுகளை வளர்த்தல் -

நடப்பட்ட கன்றுகளைப் பாதுகாத்தல் -

நடப்பட்ட தென்னங்கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்சல், பசளையிடுதல் -

தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தும்புத்தொழில் ஆகியவற்றை மேம்படுத்துதல் -

ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இதற்கு அரசின் உதவி அவசியமாகிறது.

- இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி)

### தென்மராட்சி தெற்கில்

# கட்டாக்காலிகளைப் பிடிக்க பிரதேச செயலகம் நடவடிக்கை

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதால் இப்பகுதியில் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகளைப் பிடிக்க தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகள கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் ஒப்படைக்கப்படும் எனவும்- அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டே மீள ஒப்படைக்கப்படுமெனவும் -

தெரிவிக்கப்பட்டது.

யுத்தவேளையின்போது சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், தனங்களப்பு, மறவன்புலோ, நாவற்குழி போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கால்நடைகள் இப்பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக கட்டாக்காலிகளாக அலைவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

ஏழாம் திருவிழா



## அருள் உயர்க!

நல்லை ஊரானே - எங்கள்
கனவுகளின் கந்தனே!
வெள்ளி முகத்து வள்ளி
மண வாளனே!
வேல் விழியாளை கைபிடித்த
வேலவனே மையல்
கொண்டு தெய்வானையை கரம் பற்றிய
மயில் வாகனனே!
உன் அருள் உலகெல்லாம்
உயர்ந்தோங்குக!

- ப.திபியா

## நல்வாழ்வைத் தந்திடுவாய்!

முருகா! முருகா! என்று நாம்
உள்ளம் உருகிப் பாடுகையில்
துன்பம் தீர்க்க வேல் கொண்டு
நல்லைக் கந்தன் வந்திடுவான்.

அழகுத் தெய்வம் முருகா நீ
அறிவைப் பெருக்கும் வள்ளல் நீ
படைத்தவனுக்கே பொருள் சொன்ன
உலகம் அறிந்த குழந்தை நீ.

குறைகள் நீக்கும் குமரேசா!
வினைகள் தீர்க்கும் வேலவனே!
உன் அழகைப் பாடிடுவோம்
மனதார வாழ்த்திடுவோம்.

நல்லைக் கந்தன் அருள் வேண்டி
ஆறுதலைப் பெற்றிடுவோம்
எம் குறைகள் நீங்கிடவே
உளமாரத் துதித்திடுவோம்.

கருணையுடன் வந்திடுவாய்
எம் குறைகள் தீர்த்திடுவாய்
நன்றியுடன் போற்றிடுவோம்
நல்வாழ்வைத் தந்திடுவாய்.

செல்வி சற்குணசிங்கம் நளாஜினி
சுன்னாகம்.

## நல்லருளை நல்கு!

வாயினில் சுடுசொல் வராதிருக்க உந்தன்
கோயிலை நாடிக் கும்பிட்டேன் - நாயினும்
கேவலமாய் எனைக் கீழ்ப்படுத்தினாலும் எந்தன்
நாவடக்க நல்லருளை நல்கு.

பச்சை மயிலேறிப் பவனி வரும் பாலகனே
இச்சையுடன் ஒன்றை இரப்பேன் - இச்சகத்தில்
நாத்திகர் என்னை நசுக்கினும் எந்தன்
ஆத்திரம் தன்னை அடக்கு.

நல்லூரில் வாழும் நாதனே கந்தா
எல்லோரும் என்னை எடுத்தெறிந்து - நில்லாது
இல்லாத பழிச் சொல் இயம்பினாலும் எந்நாவால்
பல்லாண்டு வாழ்த்திப் பணி.

- செ.சுதாகரன்
சாவகச்சேரி.

## அமைதி தந்தருள்வாய்

ஆடும் மயிலேறி அழகுவேல் கைப்பிடித்து தினம்
பாடு புகழ் நல்லையிலே பதிகொண்ட வேலவனே
காடும் மேடும் களிப்புடனே ஆடும் நீ
நாடும் அடியார்க்கு நற்கருணை காட்டிடுவாய்
மாடு மனையிழந்து மக்களையும் தாமிழந்து
ஓடுதனை ஏந்தி ஊர்தோறும் அலைந்தவர்கள்
கூடுதனையடையக் கூவி வருகின்றார் அவர்
வீடுகளைத் தாமிழந்தார் வேதனையைத் தோள் சுமந்தார்.
பாடுபட்டதெல்லாம் பாதியிலே பறிகொடுத்தார்
வாடும் அவர் வாழ்வைத் தழைக்கச் செய்திடுவாய்
நீடுமோ அமைதி வழி நீண்டதொரு பாதைதனில்
கூடுமோ சமாதானம் உலகம் இனி உள்ளவரை.

- பத்ம முகுந்தன்
புலோலி.

# யாழ். நகரச் சுவர்களில் சுவரொட்டி ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். நகரப் பகுதியில் உள்ள கட்டடங்களின் சுவர்களை அண்மைக் காலமாக தென்பகுதி உற்பத்திப் பொருள்களின் விளம்பரங்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. கண்ணைக் கவரும் விதத்தில் பல வர்ண நிறங்களில் இவை அச்சிடப்பட்டு சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளன.

தென்பகுதியைச் சேர்ந்த உற்பத்தி நிறுவனங்கள் தமது விளம்பரத்துக்காக இத்தகைய விளம்பரங்களை சுவர்களில் ஒட்டி வருகின்றன. இதில் அவற்றுக்கு இடையே போட்டியும் காணப்படுகின்றது.

ஒரு நாள் ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்கள் பற்றிய விளம்பர சுவரொட்டிகள் கண்ணைப் பறிக்கும் விதத்தில் ஒட்டப்படுகின்றன. அதேஇடத்தில் மறுநாள் அந்த நிறுவனத்துக்குப் போட்டியான நிறுவனத்தின் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இப்படி சுவரொட்டிகளை ஒட்டுவதில் கடும் போட்டி நிலவுகின்றது.



ஒரு நிறுவனம் ஒட்டிய சுவரொட்டிகளின் மேல் மற்றைய நிறுவனம் தனது சுவரொட்டிகளை ஒட்டுகின்றது.

நகரப் பகுதியில் இந்தச் சுவரொட்டிகள் அதிகமாகக் காணப்படுகின்றபோதும் ஏனைய இடங்களிலும் வீடுகள் மற்றும் கட்டடங்களின் சுவர்களை இந்த சுவரொட்டிகள் ஆக்கிரமிக்க ஆரம்பித்துள்ளன.

நகரப் பகுதியில் குறிப்பாக கஸ்தூரியார் வீதியின் இரு மருங்கிலும் நவீன சந்தைக் கட்டடச் சுவர்களிலும் சுவரொட்டிகளின் ஆக்கிரமிப்பை அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

நகரில் மக்கள் போக்குவரத்து நெரிசலான இடத்தில் அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய வகையில் இந்த விளம்பர சுவரொட்டிகள் கட்டுப்பாடற்று ஒட்டப்படுவது குறித்து அதிகாரிகள் தரப்பில் இருந்து எந்த அக்கறையும் காட்டப்படவில்லை



என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

விளம்பர சுவரொட்டிகளாயினும் ஏனைய சுவரொட்டிகளாயினும் பொது இடங்களில் ஒட்டுவதற்கு அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி சபைகளின் அனுமதி பெறப்படவேண்டும் என்பது விதிமுறை. எனினும், இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். நகரப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கான அனுமதி தம்மிடம் பெறப்படவில்லை என்று யாழ் மாநகர சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-173)

# எமது கடற்பகுதி எமக்கு வேண்டும் என தமிழர்கள் கிளர்ந்தெழுவது அவசியம்!

## கருத்தரங்கில் கலாநிதி சூசை ஆனந்தன் உரை

யாழ்ப்பாணம்,ஓக.9

எமது நிலம் எமக்கு வேண்டும் என்று மட்டுமன்றி எமது கடற்பரப்பும் எமக்கு வேண்டும் என தமிழ்ச் சமூகம் கிளர்ந்தெழவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் யாழ். பல்கலைக்கழ சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.சூசை ஆனந்தன்:

நேற்றுக் காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் மாணவ பேரவை உறுப்பினர் ம.குகன் தலைமையில் இடம்பெற்ற சமகால அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்குத் தொடரில் "தமிழீழத்தின் கடல்வளங்களும் மீனவர்களும் எதிர்நோக்கும் சவால்களும்" எனும் தலைப்பில் உரையாற்றியபோதே கலாநிதி சூசை ஆனந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பினனரே உள்ளூர் கடற்பரப்புக்களில் அதிகளவான பாதிப்புக்களுக்கு வடக்குக் கிழக்கு மீனவர்கள் ஆளாகியுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற மையக்கருவே முன்வைக்கப்பட்டது.

எமது நிலத்தினை மட்டும் நாம் பெற்று எதுவும் செய்ய முடியாது. அத்துடன், எமக்குச் சொந்தமாக இருக்கும் கடற்பகுதி அனைத்தும் எமக்கு வேண்டும் எனவும் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்ட நாம் கிளர்ந்தெழவேண்டும்.

தென்பகுதி மீனவர்கள் மட்டுமன்றி இந்தியா, சீனா உட்பட பிறநாட்டு மீனவர்களும் எமது கடற்பகுதிக்குள் வந்து மீன்பிடிக்கிறார்கள். இதனால் எமக்குச் சொந்தமாக இருக்கும் சொத்துக்கள் அனைத்தும் சுரண்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு தொடர்ந்து நடைபெறுமாயின் வெகுவிரைவில் எமக்குப் பரம்பரை பரம்பரையாக - சொந்தமாக - இருந்துவரும் கடற்பிராந்தியங்கள் அனைத்தும் எமது கைகளை விட்டு அன்னியர்களிற்குச் சொந்தமாகக்கூடிய நிலை ஏற்படும்.

இவற்றின் பிரச்சினைகள் தொடர்பாக அரசோ அல்லது அமைச்சர்களோ எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. இதனால், எமது மீனவர்கள் தற்போது உள்ள பிரச்சினைகளை விட இன்னும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

ஆனால், இதனை எந்த அமைப்பும் கருத்திற்கொள்வதாகத் தெரியவில்லை. எனவே, மக்களாகிய நாம் தான் இதற்குத்தீர்வுகாண ஒரு வழியைத் தேடவேண்டும்.

தமிழர்களுக்கான கடற்பிரதேசம் வடக்கில் 653.2 கிலோ மீற்றரும், கிழக்கில் 508.4 கிலோ மீற்றரும் உள்ளடக்கியுள்ளது. மொத்தமாக ஆயிரத்து 161.5 கிலோ மீற்றர் பரப்புகள் தமிழர்களுக்குரியது. இதில் வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனையும் அடங்குகின்றன.

வடமராட்சி கிழக்கில் முத்து மேடை எனும் பகுதி காணப்பட்டது. இது முழுவதுமாக தமிழர்களுக்கே சொந்தமாக இருந்தது. தற்போது இதில் மூன்றில் ஒரு பகுதி இந்தியாவுக்குச் சொந்தமாகக் காணப்படுகின்றது.

இந்தியாவும் இலங்கையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 5 லட்சம் சதுரக் கிலோ மீற்றர் வரையிலான சமுத்திரம் காணப்படுகின்றது. இதில் 70 சதவீதம் ஈழத் தமிழர்களுக்கே சொந்தமாகக் காணப்படுகிறது.

காலநிலைகளுக்கமைய இந்திய மீனவர்கள் இலங்கையின் எமக்குச் சொந்தமான கடற்பரப்பில் மீன் பிடித்துச் செல்கின்றனர். இவர்கள் ட்ரோலர் படகுகளில் வந்து மீன் பிடித்துச் செல்கின்றனர். ஆனால், இவ்வாறு எமது மீனவர்களினால் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் எம்மவர்களிடம் தொழில்நுட்பம் கொண்ட படகுகள் இல்லை. அத்துடன், ஈழத்தமிழர்கள் தமது பகுதியிலேயே - அதிலும் குறிப்பிட்ட தூரத்துக்குள்ளேயே - மீன்பிடிக்க வேண்டும் என கடற்படை கட்டுப்பாடு விதித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் 89ஆம் ஆண்டு கடற்றொழிலில் 2 லட்சத்து 69 ஆயிரத்து 629 தமிழர்கள் ஈடுபட்டிருந்தனர். இதில் நேரடியாகத் தொழிலில் ஈடுபட்டவர்கள் 63 ஆயிரத்து 176 பேர் ஆவர்.

ஆனால், 1999ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 2 லட்சத்து 11 ஆயிரத்து 999 பேரே கடற்றொழிலில் ஈடுபட்டனர். இதில் நேரடியாக தொழிலில் ஈடுபட்டவர்கள் 52 ஆயிரத்து 634 பேர் ஆவர்.

இதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல பிரச்சினைகள் காரணமாக கடற்றொழிலில் ஈடுபாடு குறைந்துள்ளதை அறியமுடிகிறது.

1990ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழ் மீனவர்கள் சுதந்திரமாகக் கடற்றொழிலில் ஈடுபட முடியாதவாறு அரசு தடை விதித்தது. அக்காலப்பகுதியில் 109 மீனவர்கள் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதுடன் 23 பேர் வரையில் காணாமற்போயுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதனைவிட, 1985 ஆம ஆண்டு குமுதினிப் படகில் 36 பேரும், 86ஆம் ஆண்டு குருநகரில் 36 பேரும், 90 ஆம் ஆண்டு அரிப்புப் பகுதியில் 9 பேரும் கொல்லப்பட்டனர். இவ்வாறு தமிழர்களின் உயிரிழப்புக்கள் தமிழர்களுக்குரிய கடற்பகுதியிலேயே நடைபெற்றன.

இதைத்தவிர, 1983ஆம் ஆண்டின் பின்னர் 7 ஆயிரத்து 466 படகுகள் கடற்படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் உள் இணை இயந்திரப் படகுகள் 564, வெளி இணை இயந்திரப் படகுகள் ஆயிரத்து 703, வள்ளங்கள் 2ஆயிரத்து 465, கட்டுமரங்கள் 2 ஆயிரத்து 709 ஆகும். இவை தவிர வலைகள், இயந்திரங்கள் உட்பட இழப்புக்களின் பெறுமதி ஏறக்குறைய ஆயிரத்து 824 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தகாலங்களைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரசு எமது மீனவர்களுக்கு தடை விதித்த காலப்பகுதிகளில் அந்நிய மீனவர்கள் எமது கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இதன்போது வடக்குக் கிழக்கு கடற்பரப்பில் இந்திய ட்ரோலர்களும் சிங்கள மீனவர்களின் சுருக்கு வலைப்படகுகளும் எமக்குச் சொந்தமாக இருந்த வளங்களை வகை தொகையின்றிச் சுரண்டிச் செல்கின்றன. இவைதவிர, ஆழ் கடல்களில் கடற்பகுதிகளில் தாய்வான், கொரியா, சீனா என பிறநாட்டுக் கப்பல்களும் வளங்களைச் சுரண்டிச் சென்றுகொண்டிருக்கின்றன. இது பற்றி பல தடவைகள் மீனவர்கள் முறையிட்டபோதும் இதுவரையில் எதுவித பயனும் கிட்டவில்லை. அதனால், வளங்கள் சூறையாடப்பட்ட வண்ணமே உள்ளன.

இது அரசுக்குத் தெரிந்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் பிறநாடுகளுடன் முறுகலநிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தாலேயே அரசு பாராமுகமாக இருந்துவருகிறது. இதனைத் தட்டிக்கேட்க விடுதலைப் புலிகள் முயற்சித்தால் அதனை அரசு வேறுவிதங்களில் சித்திரிக்கின்றது.

கச்சதீவானது தமிழர்களின் இதயம் போன்றது. அதனை நாம் குத்தகைக்குக் கொடுக்கமுடியாது. கச்சதீவை குத்தகைக்குத் தரும்படி தமிழக அரசு இந்தியாவின் மத்திய அரசையும், இலங்கை அரசையும் வற்புறுத்திவருகிறது. இது குத்தகைக்கு வழங்கப்படுமாயின் எமது இதயப் பகுதியினை நாமே தாரை வார்த்துக் கொடுப்பதற்குச் சமமாக அமைந்துவிடும். வடபகுதி மீனவர்களின் ஒரேயோரு சொத்து இந்தக் கச்சதீவு பிராந்தியமாகும். இதனை எவ்விதத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தின் ஊடாக விடுதலைப் புலிகள் எமது கடற்பரப்பிற்கும், தமிழ் மீனவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

- என்றார் அவர்.

இக்கருத்தரங்கின் ஆரம்பத்தில் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் மணிவண்ணனும், பொதுச்சுடரினை நல்லூர்க் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனும் ஏற்றிவைத்தனர்.

(ஒ-6-185)


**அருள் கொமினிக்கேசன்**

**A/L பரீட்சை முடிவுகளை உடனுக்குடன் பார்வையிடலாம்.**

**வெளிநாட்டு அழைப்புக்கள் 8/=**

**இல. 233, நாவலர் வீதி**
**(பிறவுண் வீதி சந்தி),**
**யாழ்ப்பாணம்.**

(21223) (24-11-14)

**தேவை**

பொலிகண்டி, கந்தவனம் ஸ்ரீ சுப்பிரமண்ய தேவஸ்தானத்துக்கு குருக்களுக்கு உதவியாக, மண்டப வேலைகள் தெரிந்த ஒரு பிராம்மண ஐயா தேவை.

விரும்புவோர் ஆதீனகர்த்தா அல்லது குருக்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**திரு.பா.செல்லையாபிள்ளை**
ஆதீன கர்த்தா,
கந்தவனம் ஸ்ரீ சுப்பிரமண்ய தேவஸ்தானம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

(21220) (24-11-14)

**நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்**

**உங்கள் கண்களை நாங்கள் காப்போம்**

- உங்கள் கண்களை இலவசமாகப் பரிசோதனை செய்வதற்கும் -
- சகல வகையான மூக்குக்கண்ணாடிகளையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும் -
- கண் பார்வையற்ற பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
காலம் : நாளை (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி (புதிய நேரம்)





**துஷா மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்**
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3461



(21221) (26-11-14)

# கணவனை இழந்தோருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக.9

கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகமும், யாழ். றோட்டறிக் கழகமும் இணைந்து கணவனை இழந்த பெண்களுக்கான சுயதொழில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளன. இக்கருத்தரங்கானது நாளைமறுதினம் திங்கள் காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் குடாநாட்டிலுள்ள கணவனை இழந்த பெண்கள் சுயதொழில் மேற்கொள்வதை ஊக்குவிக்கவும், அதற்கு வேண்டிய உதவிகளை வழங்கும் நோக்குடனும் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## புற்றுநோய் சிகிச்சை

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் அறிவித்துள்ளார். இச்சிகிச்சைக்கென கொழும்பிலிருந்து புற்றுநோய் வைத்திய நிபுணர் ஒருவர் வருகைதரவுள்ளார்.(ம-10)

## ஆண்டு நிறைவு விழா

உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் இல்லமான 'த ஆர்க்' அமைப்பின் 25ஆவது ஆண்டு விழாவும் புதிய கட்டடத் திறப்புவிழாவும் இன்று காலை 10 மணிக்கு உடுவிலிலுள்ள மேற்படி இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் செளந்தரநாயகமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக வெளிக்களத் தலைவர் கெய்சுகிமுறா, அருட்சகோதரி அன்சிலா ஜேம்ஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10)

### பாதுகாப்பு வலயத்தில் உள்ள

# தென்னந்தோட்டங்களை பார்வையிடுவதற்கு அனுமதி

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தென்னந்தோட்டங்களை உரிமையாளர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 13,14,15, 16 ஆம் திகதிகளில் பச்சிப்லைபள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளான கிளாலி, முகாவில், எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு முகமாலை மற்றும் நாகர் கோவல் பகுதிகளில் உள்ள தென்னந் தோட்டங்களை அவற்றின் உரிமையாளாகள் பார்வையிட அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட தென்னந்தோட்டச் சேத விவரம் கோரும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்வதற்கு உதவியாக தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சேத மதிப்பீட்டை மேற்கொள்வதற்காகவே மேற்குறிப்பிட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி தமது தோட்டங்களைப் பார்வையிட விரும்பும் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்துடனோ அல்லது இல. 104, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தெங்கு செய்கையாளர் சங்கத்துடனோ தொடர்பு கொண்டு பதிவுசெய்யும்படி நல்லதம்பி மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)


# KURSK STATE MEDICAL UNIVERSITY

முதன்மையானதும், சிறப்பானதுமான ரஷ்யாவின் ஆங்கிலமொழி மூலமான பல்கலைக்கழகம்

ENROLMENT FOR ACADEMIC YEAR 2003/2004

Conference & Interviews: 11th August 2003, 2:00 p.m. On wards

URBAN COUNCIL HALL
Dockyard Road, Trincomalee

Chief Guest :
Dr. (Mrs.) I.THARMARAJAH
Director of Medicine, North Central Province

Interviews: Under the supervision of

- Mr.Y.N. ATUKORALE
  Representative for Sri Lanka, KSMU
- Mr.K.THILAKARATHNAM
  Director of Education, Trincomalee
- Mr.C.THANDAUTHAPANI
  Principal of Hindu College, Trincomalee
- Mr.J.P. GAMINI
  Principal of Sinhala Maha Vidyalaya, Trincomalee

மேலதிக தகவல்களுக்குதொடர்பு:
Sivalingam Jeyarajeen
50A, Hampden Lane, Colombo - 06.
Tel: (01) 367092, 807686
Mobile : 077-6037837, 077-6081194
Fax: (01) 888419

www.ksmu.com
www.infolanka.com/ksmu

KSMU மாணவர்களும் பட்டதாரிகளும் A/L முடித்த, பெறுபேற்றுக்காகக் காத்திருப்பவர்களும், பெற்றோர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

(சி-29141) (15-16)


வாழ்க வளமுடன்

# சுகணா தம்பதிகளின் அமுதவிழா



அல்வை தந்த புதல்வன் அம்பிகையின் மண்டபத்தில்
இல்லறத் துணைவியொடு அமுதவிழா காணுகின்றார்
வல்ல மக்கள் உள்ளமதில் ஊற்றெடுத்த பாசத்தால்
எல்லையிலாப் புகழ்படைத்த ஏற்ற மிகு சுகணாவும்
தொல்லைகள் பல கடந்து தோன்றிவிட்டார் நாயகனாய்
அல்வைப் பதியமர்ந்த அவர் சேவை நன்குணர்ந்த
எல்லோரும் வாழ்த்திடவே சிறியேனும் வாழ்த்துகிறேன்.
வாழ்க வளமுடன்.

வாழ்த்தும் ;
உச்சி வகிடெடுத்தோன் மகன் சுந்தரலிங்கம்

C/29318) (15-19)

இணுவில்வாசி

# அமரர் தம்பிராசா அன்னலட்சுமி

அவர்கள் மீதான

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21-04-1929 மறைவு 21-07-2002

ஒன்பது சேயெமை
ஒழுங்குற வளர்த்தும்
பொன் பொருள் பொலிய எம்
தந்தையை ஊக்கியும்
அன்பினால் ஊர் அயல்
அனைவரும் போற்றவும்
அன்னலட்சுமியாய்
அன்னையே வாழ்ந்தீர்!
இன்னுயிர் வடிவில்
எம்முள்ளே கலந்தீர்!
எந்நொடியும் நாம்
ஏத்து றோம் உம்தாள்.

அன்புக் கணவர்
மக்கள், மருமக்கள்,
பேரமக்கள்.

மன்னார் எக்ஸ்பிரஸ்,
கே.கே.எஸ். வீதி, இணுவில். (21166) (24-15-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 01 08 1924



இறப்பு 10 07 2003

# திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்

அன்பான பார்வையிலே
அனைவரையும் நெகிழவைத்தாய்
அரவணைத்து மகிழ்கையிலே
அம்மா நீ தெய்வமன்றோ?
நீ நிலம் பார்த்து நடக்கையிலே
நில மகளும் நாணி நிற்பாள்!
நின் பாதம் தொழ மறந்தால்
நிம்மதியும் பறந்தோடும்!
பொறுமைக்கு இலக்கணமாய்
பெருமையாய் வாழ்ந்தவளே!
தாயே நின் பிரிவினால்
தளர்ந்து தவிக்கின்றோம்
தரணியிலே தெய்வங்கள்
வேறுளதோ கூறம்மா?

கொக்குவில் மேற்கு,
வராகி அம்மன் கோயிலடி.

-பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

(21077) (15-19)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஓக.9

கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

திருமதி ச.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் வி.வி.முருகையா கலந்து கொளவார். (ஒ-5)

★★★

வடமராட்சி,ஓக.9

தென்புலோலி குரும்பைகட்டி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-173)

★★★

மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் ஆதவன் முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆதவன் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அதிபர் பொ.சண்முகசுந்தரம் கலந்துகொள்வார். (ஒ-5-ரி)

★★★

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.அரசடி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் தலைமையில் பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ். கல்வி வலய முதன்மை ஆசிரியர் திருமதி பே.பாலேந்திரன் பங்கேற்பார். (ஒ-5)

★★★

யாழ்ப்பாணம்,ஓக.9

தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூகநிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் 10 ஆவது சமூகச்சுடர் கையெத்துச்சஞ்சிகை வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்வர். (ஒ-5-28)

★★★

வலி.வடக்கு,ஓக.9

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ்.மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பருத்தித்துறை கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஒ-5,86)

★★★

வலி.வடக்கு,ஓக.9

வட மத்திய மாகாண கிரிக்கெட் சங்கம் 19 வயதுப் பிரிவினர் அடங்கிய மாவட்ட அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், இன்று சனிக்கிழமை மாத்த[illegible] நாவல விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியும், யாழ்மாவட்ட அணியும் மோதவுள்ளன. (ஒ-5-86)

### பரிசளிப்பு விழா

கோப்பாய் ஞான பண்டிதர் சைவ விருத்திச் சங்கம் சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசைத் தினத்தையொட்டி நடத்திய போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வடகோப்பாய் சனசமூக நிலைய மண்டபத்தில் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-10)

## வாழ்த்துகின்றோம்



இன்று அமுதவிழாக்காணும் **சுகணா** தம்பதியினருக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாரதிதாசன் படிப்பகம்
அல்வாய்.

(C29394) (32-11-14)

உ
அம்பாள் துணை

## மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் – துர்க்காபுரம்



### ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய

### அலங்கார உற்சவம்

அம்பாளின் உற்சவம் 03.08.2003 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

9 ஆம் நாள் 11.08.2003 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று துர்க்கா தேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

அடியார்களின் போக்குவரத்து வசதி கருதி இ.போ.ச.பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து உய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

பரிபாலனசபை.
துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில். (213233) (32-11-14)

- சி.நவரத்தினம்
ஆலய தர்மகர்த்தா.

## நீங்காத நினைவுகளுடன்....

**14 ஆம் ஆண்டு**



தோற்றம் 1926 - 02 - 05 | மறைவு 1989 - 08 - 24

அமரர்
**வேலுப்பிள்ளை இராசநாயகம்**

அன்பின் உறைவிடமும்
அறிவின் இல்லிடமுமான
அன்புத் தீபங்களே!
மாதா, பிதா என்று எம் இதயத்தினில்
பதிந்திட்ட எம் தெய்வங்களே!
ஆண்டுகள் கடந்தாலும் என்றும்
உம்மை நாங்கள் நினைந்திடுவோம்.

**முதலாம் ஆண்டு**



பிறப்பு 1928 - 10 - 26 | இறப்பு 2002 - 08 - 09

திருமதி
**இராசநாயகம் முத்தம்மா**

இறைவன் பாதத்தினில் தூய
உள்ளத்தோடு வீற்றிருக்கும் - எம்
இதயங்களுக்கு நீங்காத
நினைவுகளுடன் - உங்கள்
பாதங்களில் பணிகின்றோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*T.P. 222 5344* (21226) (32-11-14-29)

## சர்வதேச அழைப்புக்கள்

★ குறைந்த கட்டணத்தில் வீட்டிலிருந்தவாறே சர்வதேச அழைப்புக்களைப்பெற விரும்புகிறீர்களா? (SLT மூலம் சிக்கன நேரத்தில் நிமிடம் 10/- மட்டும்)

★ குறைந்த கட்டணத்தில் வலைப்பின்னல் ஊடான சர்வதேச அழைப்புக்களை வழங்க விரும்புகிறீர்களா?

தொடர்பு கொள்ளுங்கள்:

### சிற்றி தொலைத்தொடர்பு சேவை

11 இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச்சந்தி.

வாடிக்கையாளர்களுக்கு வலைப்பின்னலூடான சர்வதேச அழைப்புக்கள் நிமிடம் 10/- மட்டும்

வலைப்பின்னலூடாக உயர்தர பெறுபேறுகளை எம்மிடம் பார்வையிடலாம்.

(21228) (32-11-141-29)

## துயர் பகிர்கின்றோம்

எமது நலன்புரிச் சங்க அங்கத்தவர்
திருமத **கி.கனகசிங்கம் (கண்ணாக்கா)**
அவர்களின் பாசமிகு கணவர்
**சீவரத்தினம் கனகசிங்கம்**

அவர்களின் மரணம் எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாரின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட இப் பெருந்துயரில் நாமும் பகிர்வு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்.கல்வி வலயம்.

(21229) (32-11-14-29)

## மரண அறிவித்தல்கள்

### சீவரட்ணம் கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற சிறுவர் நன்னடத்தை பாதுகாவலர் அதிகாரி)

குப்பிளான், காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் கனகசிங்கம் அவர்கள் 30.07.2003 புதன்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சீவரட்ணம் தம்பதிகளின் மகனும் கிருஸ்ணகுமாரியின் (கண்ணாக்கா - கல்வித் திணைக்களம், யாழ்.வலயம்) அன்புக் கணவரும் கஸ்தூரி (ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை, பட்டப்படிப்புகள் கல்லூரி கலைப்பிரிவு மாணவி), முரளிதரன் (**Diploma in fisheries first batch**), வாசுகி ( விஞ்ஞானப்பிரிவு 2005 **A/L** மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவியின் (ஜேர்மன்) சகோதரரும் காலஞ்சென்ற முத்து கிருஸ்ணன் மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் மருமகனும் கந்தையா, கிருஸ்ணவேணி, கிருஸ்ணபவானி (சுவிஸ்), கிருஸ்ணதயாளினி (பிரான்ஸ்), கிருஸ்ணராதா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2003) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அன்னை இல்லம்'*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (21235) (11-14-29)

தகவல்:
மனைவி (கண்ணாக்கா),
பிள்ளைகள்.

### மரிசால்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்களம்)

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரிசால்பிள்ளை அந்தோனப்பிள்ளை 07.08.2003 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியநாதர் - விக்ரோறியா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற ஆன்றோஸின் அன்புக் கணவரும் செல்வதி, மரியநாயகம், தாசன், கிளாறா, புஸ்பா, குணநாயகம், சாந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும் மங்களநாயகம், மகேஸ்வரி, செல்வி, மங்களம், லெற்றன், சுபோதினி, செந்தில் ஆகியோரின் மாமனாரும் ராஜகாரியர், காலஞ்சென்ற இராசம்மா, ஆயர் **L.R.**அன்ரனி (இளைப்பாறிய ஆயர், திருகோணமலை, மட்டக்களப்பு ) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல:02, மவுன்கார்மேல் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து நாளை (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகளின் பின்னர் கரம்பொன் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல : 02, மவுன்கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (21241) (11-29-14)

**செல்வதி மங்களநாயகம் (மகள்)**

### இளையதம்பி பாலசிங்கம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகக் கொண்டவரும் கோணடாவிலில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய இளையதம்பி பாலசிங்கம் அவர்கள் 01.08.2003 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வியாழம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் கனடாவில் வசிக்கும் திருமதி சிவபாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற நடனமூர்த்தி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகாம்பிகை, அமிர்தலிங்கம் (ஆனந்தன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தகுமாரி (மல்லாவி), ஸ்ரீபாலன் (ஹரணி ஹாட் வெயர் **& Motor** உரிமையாளர், யாழ்ப்பாணம்), ஜெயந்தி (கனடா), ஸ்ரீரங்கன் (பொறியியலாளர், கனடா), காலஞ்சென்ற சுபாசினி, ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபன் (கமல் மாடம் பல் பொருள் விற்பனை நிலையம், மல்லாவி), கலையரசி (யாழ்ப்பாணம்), கதிரசெல்வன் (கனடா), தனுஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜந்தன், ஷர்மினி, தர்சிகா, ஹரணி, ஹரிகரன், துசிகா, தயான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் உள்ள ரொரன்ரோ மாநகரத்தில், இலங்கை நேரப்படி (08.08.2003) வெள்ளிக்கிழமை மாலை 5மணி முதல 9மணி வரையும் மறுநாள் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் 9மணிவரையும், இல3725, **Keele Street** இல் அமைந்துள்ள **De Marco Funeral Home** இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் 9.30 மணி முதல் 10.30 மணி வரை இல.1567, **Royal York Road** இல் அமைந்துள்ள **Riverside Crematorium** திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*தொடர்புகளுக்கு :*
*ஸ்ரீபாலன், ஜெயந்தி,*
*ஸ்ரீரங்கன் (416) 398 - 0245*
*197, பொற்பதி வீதி,*
*கோண்டாவில், யாழ்ப்பாணம்.* (21237) (11-14-29)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு பிரிட்டனில் அபார வெற்றிகள்!



பிரதம அதிதியுடன் வலைப்பந்தாட்ட வீராங்கனைகள்.

முதல் தடவையாக தமிழர் தாயகத்திலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற தமிழீழ வலைப்பந்தாட்ட அணி மாபெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளது. இவ்வணி லண்டன் வாழ் தமிழர்களைக் கொண்ட 11அணிகளுடன் மோதி சகல போட்டிகளிலும் வென்றது. இறுதியில் வெள்ளையர்களைக் கொண்ட பிறிக்ஸ்ரன் பரோ அணியையும் 33:27என்ற விகிதத்தில் தமிழீழ அணி வெற்றிபெற்றது.

தமிழீழ வலைப்பந்தாட்ட அணி முதன் முறையாக வெள்ளையர் அணியுடன் மோதி வெற்றிபெற்றுள்ளது. ஆங்கிலேயர்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே தமிழீழ அணி தோற்கடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ வலைப்பந்தாட்ட அணி தனது பிரிட்டிஷ் சுற்றுலாவில் முதன்முதலில் ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவிகள் அணியுடன் சிநேகபூர்வ போட்டியில் மோதி 61:01 என்ற விகிதத்தில் வென்றது. பின்னர் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் அணியை 56:11என்ற விகிதத்திலும், வேம்படி மகளிர் அணியை 57:17 என்ற விகிதத்திலும் வென்றது.

அதன்பின் ஜூலை 27ஆம் திகதி புறோம்லி நகரில் நடைபெற்ற 8 ஆவது விளையாட்டு விழாவில் தமிழீழ அணி பங்குபற்றியது.

இத்தொடரில் தனது முதற்போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை 12:03 என்ற விகிதத்திலும், வேம்படி மகளிர் கல்லூரி அணியை 14:08 என்ற விகிதத்திலும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை 15:06 என்ற விகிதத்திலும், வல்வை அணியை 15:02 என்ற விகிதத்திலும் தமிழீழ அணி வென்றது.

இறுதிப்போட்டியில் சுண்டுக்குளி மகளிர் அணியும் தமிழீழ அணியும் மோதின இப்போட்டியில் தமிழீழ அணி 12:03 என்ற விகிதத்தில் வென்றது.

பின்னர் இவ்வணி லண்டன்வாழ் தமிழர் தெரிவு அணியுடனான கண்காட்சிப்போட்டியில் 25:09 என்ற விகிதத்தில் வென்றது.

இறுதியாக வெள்ளையர் களைக் கொண்ட பிறிக்ஸ்ரன் அணியுடன் தமிழீழ அணி மோதியது விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் முதற் சுற்றில் 08:07 என்ற விகிதத்தில் தமிழீழ அணி வென்றது.. இரண்டாவது சுற்று 06:06 என்ற விகிதத்தில் சமநிலையில் முடிவுற்றது.



பிரதம அதிதிக்கு வீராங்கனைகள் அறிமுகம் செய்யப்படும் காட்சி.

மூன்றாவது சுற்றில் 10:07 என்ற விகிதத்தில் பிறிக்ஸ்ரன் அணி வென்றது. எனினும், 4 ஆவது சுற்றில் ஆக்ரோஷமாக விளையாடிய தமிழீழ அணி, 12:04என்ற விகிதத்தில் வென்றது. இதனால் முடிவில் 33:27 என்ற விகிதத்தில் தமிழீழ அணி வெற்றி பெற்றது.

தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு ரதிகலா தேவி ஆனந்த வடிவேல் பயிற்சிகளை வழங்கினார். இவ்வணியின் முகாமையாளராக ரோகான் இராஜசிங்கம் கடமையாற்றினார்.

அணியில் நிஷாந்தி இராஜரட்ணம் (அணித்தலைவி), தயாளினி செல்வராசா,சங்கீதா திருச்செல்வம், சந்திரமதி தவராஜா, பூமகள் கந்தசாமி, மாலினி மகாலிங்கம், நித்தியா இராஜரட்ணம், பிரிந்தா சோமசுந்தரம், கமீலா குணரட்ணம், நிர்மலா காத்துமுத்து, இராதா ஆனந்தகிளி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இதேவேளை - புறோம்லி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 8 ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து சிறப்பித்தனர். கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் மெய்வன்மைப் போட்டி, நீச்சல் போட்டி என்பன நடைபெற்றன.

பல்வேறு கல்லூரிகளின் பழைய மாணவர்கள் பங்குபற்றிய கிரிக்கெட் தொடரில் இறுதிப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரியை யாழ்.மத்திய கல்லூரி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.



வெற்றிக்களிப்பில் தமிழீழ அணி

இப்போட்டிக்கு முன்னர் சிநேகபூர்வ போட்டியொன்று நடைபெற்றது. அப்போட்டியில் பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் 7 வீரர்களைக் கொண்ட அணியும் கனடாவின் தேச அணியில் விளையாடுகின்ற தமிழீழத்தைச் சேர்ந்த துஷ்யந்தன், சஞ்சீவ் ஆகியோர் அடங்கிய தமிழீழ அணியும் இப்போட்டியில் பங்குபற்றின.

இப்போட்டியில் சர்வதேச அணி 4 விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தமிழீழ அணி 75 ஓட்டங்களை மட்டுமே ஒரு ஓட்டத்தினால தோல்வியுற்றது. இப்போட்டியில் சிறப்புவிருந்தினராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் ரமீஸ் ராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

வெற்றிபெற்ற அணிகளுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

(எ)

## மூவாயிரம் பாடசாலைகளில் தகுதியற்றோர் அதிபர் பதவியில்

### கல்வி அமைச்சர் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஓக.9

நாட்டிலுள்ள சுமார் மூவாயிரம் பாடசாலைகளில் தகுதியற்றவர்கள் அதிபர்களாக கடமையாற்றிவருவது தெரியவந்திருக்கிறது என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளிலேயே இத தகைய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள 9 ஆயிரத்து 876 பாடசாலைகளில் மூவாயிரம் பாடசாலைகள் வரையில் உரிய தகைமைகள் இல்லாத அதிபர்கள் நிர்வகிக்கின்றனர் என்றும் -

இதனால், அப்பாடசாலைகளின் முழுக்கட்டமைப்புமே சீர்குலைந்துள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளில் அதிபர்களை நியமிப்பதில் அரசாங்கம் தலையிட முடியாத நிலை இருப்பதாகவும் அமைச்சர் கொடித்துவக்கு சொன்னார். (எ-4)

## தபாலக புனரமைப்பு திங்களன்று ஆரம்பம்

யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி அஞ்சல் அலுவலகக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

புனரமைப்பு வேலைகள் நாளை மறுதினம் காலை 9மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

புனரமைப்பு வேலைகளுக்கான நிதியினை தகவல் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஒதுககியுள்ளார்.

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

வலிமேற்கு,ஓக.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் மு.சிவராசாவிடம் வீதியில் கண்டெடுக்கப்பட்ட சிறிய தங்க ஆபரணம ஒன்று ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்-

தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறும்-உதவிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-175)

## இலவச மருத்துவ முகாம்

வலி.வடக்கு,ஓக.9

மல்லாகம்-தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவமுகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மருத்துவ முகாமில் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி பவானி மற்றும் வைத்திய கலாநிதிகளான ருக்குமணிநாகா, சயந்தன், ஜெயந்தி சேனாதிராசா, யூடி (சத்திரசிகிச்சை), நிமலராஜன் (சத்திரசிகிச்சை), சத்தியநாதன், சோதிநாதன் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி நவமலர் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க உள்ளனர்.

பரிசோதனை செய்யப்படும் நோயாளர்களுக்கான மருந்துகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இவ் மருத்துவ முகாமில் தெல்லிப்பளை, மல்லாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள மக்களையும் கலந்து பயன்பெற முடியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-86)

## வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது!

வீட்டில் தந்தை - மகன் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது. தந்தையின் கத்தி வெட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படும் மகன்கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி - சிவகுமார் (வயது-28) என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார்.

வீட்டில் தந்தையும் மகனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் -

கோபமடைந்த தந்தை மகனைக் கத்தியால் வெட்டியதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-6-8)

## மரண அறிவித்தல்கள்

### புதியார் இராசையா (பூசாரி)

இடைக்காடு தேற்றாவடியைப் பிறப்பிடமாகவும் உடுத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட புதியார் இராசையா 05.08.2003 அன்று செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2003)சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் "மம்பத்தவளவு" இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மம்பத்தறிவு,*
*இடைக்காடு.* (21244) (29)

தகவல்:
இலச்சுமிப்பிள்ளை (மனைவி)
(சின்னம்மா அக்கா)

### செல்வி நிஷாலினி

பாடசாலை வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்வி நிஷாலினி (சிறி வைத்திலிங்கம் வித்தியாசாலை தரம்-5 மாணவி) அவர்கள் நேற்று (08.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குணரத்தினம் - சிவயோகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும் தர்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி தரம்-9), சரண்யா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி தரம் - 8) ஆகியோரின் இளைய சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2003) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.2 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*ஆறுகால் மடம்,*
*ஆனைக்கோட்டை.* (21243) (32-14-11-29)

தகவல்:
த.குணரத்தினம்.

### சுந்தரம்பிள்ளை அமிர்தலிங்கம்

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் அவர்கள் 07-08-2003 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் (அம்மாக்கா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற கந்தையா - தையல்முத்து தம்பதிகளின் மருமகனும் பத்மவதனி (பிரான்ஸ்), தயாவதனி, போசன் (பிரான்ஸ்), ஈஸ்வரன் (பிரான்ஸ்), சுரேந்திரன்(லண்டன்), சுபோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவராசா(பிரான்ஸ்), நந்தினி (பிரன்ஸ்), ஹேமலதா (பிரான்ஸ்), ராஜ்மோகன (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, தாமோதரம்பிள்ளை, மகேஸ்வரி மற்றும் பரமானந்தம், காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, சாரதாம்பாள் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சுப்பையா, சபாரெத்தினம் மற்றும் சிவகாமசுந்தரி, செல்லத்துரை, தனையசிங்கம், லோகராசா, குலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் பிரான்ஸைச் சேர்ந்தவர்களான மயூரி, வினோ, அஜித், லக்சி, லக்சன், யதூசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-08-2003) ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு பொரளையில் இடம்பெற்று, பூதவுடல் பொரளை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

*இல:68, கன்னாரத்தெரு,*
*கொழும்பு - 13*
தொலைபேசி இல: **01-380043**

தகவல்:
அ.மகேஸ்வரி (மனைவி)
(C/29396) (29-11-14)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**
**பட்டப்பின் கல்வித்தகைமை (யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)**
**பகுதிநேரம் I, பகுதி நேரம் II, முழு நேரம்**
**இரண்டாம் பருவத்தேர்வு**

மேற்படி தேர்வுகள் 2003.09.02 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் 2003.09.02 தொடக்கம் 2003.09.05 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அதன் வவுனியா வளாகத்திலும் நடைபெறும். முன்னர் அறிவிக்கப்பட்டபடி 18.08.2003 இல் நடைபெறமாட்டாதென்பதையும் கவனத்திற்கொள்ளவும்

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.
08.08.2003 (C/29392) (29-11-14)

இன்று வெளியாகும் A/L 2003 பரீட்சை முடிவுகளை உடனுக்குடன் Internet மூலம் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சிறீ முருகன் தொலைத் தொடர்பகம்**
இல.303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222-2670
(C29398) (32-11-14-29)

**லக்ஷ்மி சினிமா** இணுவில்
அர்ஜுன், மனிஷாகொய்ராலா, வடிவேல், மணிவண்ணன் இன்னும் பலர் நடிப்பில்
**முதல்வன்**
பு.நேரம்: 11.00,3.00,7.00.
(21145) (31-14-17)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல் சரோஜா திரைப்படம் மூலம் திரையுலகத்திற்கு அறிமுகமாகிய நித்தியவாணி நடித்த (C29232)
**சின்ன தேவதை** (தமிழ்) (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(31-14-11-29)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
சாருகான், அஜித் நடித்த
**சாம்ராட் அசோகா**
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**Red Scorpion**
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-14-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
16.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
தினசரி: 10.30,2.30,6.30,
(C/29233) (31-14-11)

**லிபேட்டி** அச்சுவேலி





அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
**சிட்டிசன்** (ரீலஸ்)
தினசரி: 3.00, 7.00 (பு.நேரம்)
காலை 11.00 **JUDGE & JURY**
(C/29373) (31-14-17)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின்

# சுகாதார நிலைமை மாற்றமடைய தனியான நிர்வாக அலகு தேவை!

## மாகாணப்பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.9

வடக்கு-கிழக்கின் சுகாதார நிலைமையில் மாற்றம் ஏற்படவேண்டுமெனில் எமக்கென தனியான அரச அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு அவசியம்.

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை.

சங்கானை சுற்றியல் கூறு அரசின் வைத்தியசாலையில் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட இருமாடிக் கட்டடத்தின் திறப்பு விழாவில கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெறற் இவ் வைபவத்திற்கு வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா தலைமை வகித்தார். பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சோ. அமிர்தலிங்கம் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

வடக்கு மாகாணத்தின் நீண்டகாலத் தேவைகளாக இருந்துவரும் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறை துணை மருத்துவசேவை அலுவலர்களுக்கான பற்றாக்குறை, குடும்ப சுகாதார சேவை அலுவலர்களுக்கான பற்றாக்குறை ஆகிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாணச் சுகாதாரத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆனாலும், இதற்கு மேலிடங்களில் இருந்து அரசியல் தடைகளும், தலையீடுகளும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. எமது பிரதேசத்தில் வைத்திய மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் எமக்கெனத் தனியான அரச அதிகாரமுள்ள நிர்வாகக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம். இதன் மூலம் பிறர்தலையீடுகள் இன்றி வைத்திய அபிவிருத்தித்திட்டங்களை எளிதில் நடைமுறைப் படுத்த முடியும்.

கடந்த போர்க்கால நிலைமை காரணமாக சுமார் 20 வருடங்களாக புதிய அபிவிருத்தித் திட்டங்களை இங்கு மேற்கொள்ளமுடியாத நிலை இருந்து வந்தது. நாட்டின் ஏனைய பகுதிகளில் வைத்திய, சுகாதார சேவைகளில் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொளளப்பட்டு வந்தபோதிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகள் எதுவும் இடம்பெறவில்லை.

கொழும்பு தேசிய அரசினர் வைத்தியசாலையில் தற்போது அளவுக்கதிகமான டாக்டர் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளதால் அங்கு அவர் இருந்து பணிபுரிய கதிரைகள் போதுமானதாக இல்லை. 'சங்கீதக் கதிரை' விளையாட்டைப்போல கதிரையில் இடம்பெறுவதற்கும் அங்கே டாக்டர்களிடையே போட்டி!

ஆனால், வடமாகாணத்தில் பல வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என்பதை நான் அறிவேன். தங்கள் பயிற்சியை முடித்த பல்கலைக்கழகத்து மருத்துவபீட டாக்டர்களும் தென்னிலங்கை வைத்தியசாலைகளில் சென்று பணிபுரிந்து வருகின்றனர். அரசியல் வாதிகளின் உதவியுடன் தமக்கு வசதியான இடங்களில் இவர்கள் வேலை செய்து வருகின்றனர்.

எமது வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. மேல்லிடத்து அரசில் செல்வாக்கு மற்றும் தலையீடுகள், எமக்குகென நிர்வாகக்கட்டமைப்பு உள்ள அரச ஒன்றும் இல்லாமையுமே இதற்குக் காரணம என்று கூறலாம்.

யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி, சங்கானை ஆகிய மூன்று வைத்தியசாலைகளையும், தள வைத்தியசாலைகளாக தரம் உயர்த்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டு அதற்குரிய ஆவணங்கள் உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன- என்றார். (எ-135)

## முகவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்துள்ளது.

குவைத்திலுள்ள இலங்கைத் தூதுவர் இது குறித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு அறிவித்திருக்கிறார்.

இந்த 26முகவர்களும் குவைத்துக்கு வேலைக்காக இனிமேல் எவரையும் அனுப்பமுடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமுர்த்தி அலுவலருக்கு வவுனியாவில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.9

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று வவுனியாவில் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விவசாய பயிற்சிக்கல்லூரியில் இந்தச் செயலமர்வு இடம்பெறும்.

(எ-8)

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டிலேயே இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இது குறித்து மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் மற்றும் அரசியல்துறையின் விடயப் பொறுப்பாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

குடாநாட்டில் இனங்காணப்பட்டுள்ள தேவைகள் மற்றும் பிரச்சினைகள் என்பன குறித்து தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் இந்த மாநாட்டின்போது தமது தீர்மானங்களை முன்வைக்கவிருக்கின்றனர். இத்தகைய தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும்.

மக்கள் அமைப்பாக இருக்கும் இந்த தேசிய எழுச்சிப் பேரவை அந்தந்த மாவட்ட மக்களின் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு உரியவர்களுடன் தொடர்புகொண்டு அவற்றைத் தீர்த்துவைக்கும்.

அத்துடன்,தேசிய ரீதியான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் அமைப்பாகவும் இது விளங்கும்.மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும உறுப்பினர்களுக்கான வாகன ஒழுங்குகள் அந்தந்த கிராம மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்று அவர் மேலும் தெரி வித்தார். (எ-4-30)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் பேரில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்படுமேயானால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கிற்கும் தனியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானம் விரைவில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்திருக்கிறார்.

அரசின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவுக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு ஏற்கனவே மாற்றுயோசனைகளைத் தயாரித்திருக்கிறது. இந்த யோசனைகளும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

(ஐ)

## குரங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹென்ஸ் பிரட்ஸ்கரிடம் எழுத்து மூலம் அக்கோரிக்கை விடுக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்தது குறித்து விளக்கியும் அதற்காகக் கவலைப் படுவதாகவும் குறிப்பிட்டு அரசுக்கு எழுத்து மூலம் அறிவித்ததாகவும் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-4)

## ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சிகரெட் வகைகள் அங்கீகாரம் இன்றி நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டிருப்பதும் -

அவை ஏனைய பகுதிகளில் விற்பனையாகும் விலைகளிலும் பார்க்க மிகக்குறைந்த விலையில் இங்கு விற்பனை செய்யப்பட்டு வந்திருப்பதும்-

நேற்றைய அதிரடிச் சோதனையின் மூலம் தெரியவந்துள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற சிகரெட் வகைகளை மட்டுமே வாங்கி விற்பனை செய்யுமாறு சிகரெட் விற்பனையாளர்களை அதிகாரிகள் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

(ஐ-5-8-ரி)

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தைப் பொறுத்தவரை இலங்கையின் பாதுகாப்பு விடயமும் அதில் முக்கியமாக அடங்குகின்றது என இந்தியா கருதுகிறது. அதனாலேயே இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரின் அழைப்பை ஏற்க இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் முடிவுசெய்தார்.

- என்று இந்திய வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஏற்பட்டுவரும் மாற்றங்களை, தனது கோடியில் உருவாகும் விவகாரங்களாக இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. அந்தச் சிரத்தையும் இலங்கைப்பயணத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சரைத் தூண்டியுள்ளது- என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

என்றாலும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், ஜோர்ஜ் பெர்னாண்டஸ், தீவிர புலிகள் ஆதரவாளராக இருந்தவர் என்பதும் -

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 26 பேருக்கும் புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு அமைப்பு ஒன்றை உருவாக்கி தாமே அதற்குத் தலைவராக இருந்து பெருமளவு நிதி திரட்டிக் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

(ஐ-4)


WALK-IN INTERVIEW

Walk in and be our lady Receptionist if you posses the under mentioned:-

* Should have passed the G.C.E A/L and be between 20 to 35 years of age.
* Posses a smart pleasing personality, warm and calm approach to customers' queries in fluent English.
* Should have experience in office environment. A knowledge in Microsoft Word would be an advantage.
* Attractive salary will be offered according to qualification and experience.

Interested persons should call over at this office from 11.00 A.M to 1.00 P.M on Saturday 16th August 2003.

- Director
IIS,100, Clock Tower Road,
Jaffna.

IBMS

Registered with Tertiary and Vocational Education Commission for the provision of Tertiary Education/Vocational Education in the Democratic Socialist Republic of Sri Lanka under the provisions of the Tertiary and Vocational Education Act No. 20 of 1990

Registration No.:P25/0010

புலமைப் பரிசில் திட்டம் 2002/03

விண்ணப்ப முடிவுத் திகதி : 20-08-2003
பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான போட்டிப் பரீட்சை 30-08-2003 நடைபெறவுள்ளது.

► Diploma in Business Applications (MS Office உள்ளடங்கலானது)
► Diploma in Digital Scince (Programming Course)

பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் இடம் (யாழ்ப்பாணம்/ நெல்லியடி/ சாவகச்சேரி) என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை IBMS, 701, K.K.S. Road, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் தலைமையகத்தில் அல்லது நெல்லியடி/ சாவகச்சேரி கிளைகளில் கையளிக்கப்படவும் முடியும்.

TVS பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எதிர்வரும் புதன்கிழமை (13-08-2003) TVS நிறுவனத்தினர்
உங்கள் TVS மோட்டார் சைக்கிள்களை இலவசமாக
பரிசோதிப்பதற்கு இந்தியா, கொழும்பில்
இருந்து வருகை தரவுள்ளனர்.

அறிமுகம் F2



முன்கூட்டியே உங்கள் பெயர்களை
பதிவு செய்து கொள்ளுங்கள்

பதிவு செய்யும் இடம்:
இரட்ணம்ஸ் சேவைத் தளம்
இல. 30, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.

சுசுக்கி ரேடர்ஸ் TVS
59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்,
TVS LANKA PRIVATE LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர்
0777-340056/222-6185

இணையத் தளத்தினூடாக (Internet) (A/L) உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

இன்று வெளியாகும் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை இணையத் தளத்தினூடாக மிகத்துரிதமாக பார்வையிட்டு, பிரதிகளாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Global Informatics (Pte) Ltd
#379, Kasthuriyar Road, Jaffna.
T.P:- 0777364247, 021222 5735/6
(32-14-11-29) (C29395)

வீடு தேவை

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் அலுவலகப் பாவனைக்கும், பார்வையற்றவர்கள் ஒன்று கூடவும் வசதியான வீடு/கட்டடம் நலன்விரும்பிகளிடம் இருந்தோ அன்றி வாடகைக்கோ எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு முகவரி
செயலாளர்,
151, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P. 222 6017

(21177) (32-14-11-29)

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (C/ 29397)

(29-14-11)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கை இல்லை

## அதனாலேயே அவர்களை நாம் பிடிக்கவேண்டி ஏற்பட்டது என்கிறார் சமாசப் பிரதிநிதி

யாழ்ப்பாணம்,ஓக.9

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, எமது மீனவர்களுக்கு ஏற்படுத்தும் நஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்காமையினாலேயே இந்திய மீனவர்களைப் பிடிக்கும் நடவடிக்கையில் எமது மீனவர்கள் ஈடுபடவேண்டி ஏற்பட்டது.

- இவ்வாறு தெரிவித்தார் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார். நேற்றுமுன்தினமிரவு இந்திய மீனவர்கள் 10 பேர் பருத்தித்துறை மீனவர்களினால் பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 'உதயன்' செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மீனவர்கள் தொழில் புரியும் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர் அண்மைக்காலங்களில் அத்துமீறி நுழைந்து வலைகள், மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்துகின்றனர்; எமது கடல் வளத்தையும் அள்ளிச் செல்கின்றனர்.

அதிகளவிலான படகுகளில் வரும் இவர்கள் எமது மீனவர்களைத் தாக்குவதிலும் அச்சுறுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், எமது மீனவர்கள் சுதந்திரமாக எமது கடலில் தொழிலில் ஈடுபட முடியாதநிலை தோன்றியுள்ளது.

கடந்த பல மாதங்களாக நீடித்து வரும் இப்பிரச்சினைக்கு சுமுகமான



முறையில் தீர்வைப் பெற்றுத் தருமாறு நாம் பல தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் எமது விடயத்தில் உரிய தரப்பினர் எவரும் அக்கறையுடன் செயற்படவில்லை.

இதனால், எமது மீனவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இதன் • ஒரு வெளிப்பாடாகவே புதனன்று இரவு எமது மீனவர்கள் 10 இந்திய மீனவர்களைப் பிடித்துவந்தனர். உரிய தரப்பினர்கள் விரைவில் இதற்கான ஒரு தீர்வைப் பெற்றுத் தராவிட்டால் எமது மீனவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

கடற்படையினர் இது விடயத்தில் சரியாகச் செயற்பட்டால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தமுடியும். ஆனால், கடற்படையினர் இதில் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்திய மீனவர்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். அவர்களையும் எமது சகோதரர்களாகவே நாம் பார்க்கின்றோம். ஆனால், அவர்களது தொழில் முறைக்கும் எமது தொழில் முறைக்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது. இந்திய மீனவர்களது தொழில் முறை மூலம் எமது கடல் வளங்கள் முற்றாக அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனாலேயே நாம் அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு கேட்கிறோம்.

எனவே, எமது மீனவர்களின் நலனையும், அவர்களது தொழிலையும் கருத்திற்கொண்டு உரிய தரப்பினர் இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- என்றார். (ம-8)

### அரியாலை விவசாயிகளுக்கு கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஓக.9

அரியாலைப் பகுதி விவசாயிகளுக்கான கலந்துரையாடல் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அரியாலைப் பகுதியில் பல ஆயிரக்கணக்கான நெற்செய்கை நிலங்கள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகவும் மற்றும் மிதிவெடி அச்சம் காரணமாகவும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டமுடியாத நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

### திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில்

# சுகாதாரச் சீர்கேடு ஏற்படுத்தும் வியாபாரிகளுக்கு தண்டம் விதிப்பு

## நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.9

திருநெல்வேலிப் பொதுச் சந்தைப் பகுதி மற்றும் சுற்றுப் புறங்களில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் வியாபாரிகளிடம் தண்டப்பணம் அறவிடப்படும்.

- இவ்வாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வர்த்தகர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளால் சுகாதாரத்திற்கும் வீதிப் போக்குவரத்திற்கும் இடையூறாகக் கழிவுப் பொருள்கள் வீசப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது சம்பந்தமாக வியாபாரிகளுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. ஆயினும் பயன் எதுவும் எட்டப்படவில்லை.

இந்நிலையிலேயே தண்டம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடைச் சொந்தக்காரரும் தமது கடையில் உள்ள கழிவுப் பொருள்களைச் சேர்த்து வைத்துவிட்டு, எமது பிரதேச சபையின் கழிவகற்றும் பிரிவினர் வரும்போது அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அத்தோடு, இளநீர் வியாபாரிகள் தம்மால் விற்கப்படும் இளநீரின் கோம்பைகளை நன்றாகப் பிளந்துவிட்டே அவற்றைக் கழிவாக இடவேண்டும். ஏனெனில், கோம்பைகளை முழுமையாகப் போடும்போது அவற்றில் நீர் தேங்கி நுளம்பு பெருகச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இந்த நடைமுறையை நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் பின்பற்றவேண்டும்

தற்போது இந்நடவடிக்கை திருநெல்வேலிப் பகுதியிலேயே உடனடியாக அமுல் படுத்தப்படுகின்றது.

- என்றார் அவர். (ஒ-12)

### பாதுகாவலர் சங்க உறுப்பினருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.9

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கோட்டை முனீஸ்வரன் கோயில் முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் எஸ்.சற்குணம் கேட்டுள்ளார். (ஒ-10)

# கணனியுகத்தில் களிமண் வீதிகள்; வடமராட்சி கிழக்கின் அவலநிலை!

**யாழ்.** மாவட்டத்தின் கிழக்குப் பிரதேசமான வடமராட்சி கிழக்கு, மேற்கே மணற்காடு தொடக்கம் கிழக்கே சுண்டிக்குளம் வரையான 52 கிலோ மீற்றர் நீளமும் 3கிலோ மீற்றர் அகலமும் கொண்ட ஒரு நீண்ட பிரதேசமாகும்

யுத்தத்தினால் அவ்வப்போது இப்பிரதேசத்தில் உள்ள குடிமனைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், ஆலயங்கள், வீதிகள் மற்றும் பொதுக் கட்டடங்கள் என்பன அழிக்கப்பட்டன.

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி, பேச்சு ஆரம்பமானதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், பல தொண்டு நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் பெரும்பாலும் கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலேயே செய்யப்படுவதாக பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். ஆனால், யுத்தத்தால் முழுவதும் அழிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசம் எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாது கைவிடப்பட்டுள்ளது. மக்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் கடந்த நிலைலும் இப்பிரதேசத்தில் உள்ள குடிமனைகள், வீதிகள், பாடசாலைக் கட்டடங்கள், வைத்தியசாலை என்பன அழிவுற்ற நிலையிலேயே உள்ளன.

**வீடமைப்பு**

குடிமனைகளை எடுத்துக்கொண்டால், சுண்டிக்குளம் தொடக்கம் குடாரப்பு வரையும் ஒரு கல்வீட்டினை முழுமையாகக் காணமுடியாது. அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலும் மக்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால், ஒரு வீடமைப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மக்கள் இன்னமும் ஓலைக்குடிசையிலும், மரநிழல்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இம்மக்களுக்கான கொடுப்பனவுகளும் முழுமையாக வழங்கப்படவில்லை.

**வைத்திய வசதி**

இப்பிரதேசத்தில் வைத்திய வசதி அறவே இல்லை என்று கூறலாம். ஒரு நோயாளி மருத்துவ சேவைக்காக கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணம் போகவேண்டிய நிலையுள்ளது. இப்பகுதியில் உள்ள ஒரேயொரு கிராமிய வைத்தியசாலைக் கட்டடம் இழந்த நிலையில் இருக்கின்றது. இதனால், அங்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. கட்டட வேலையைத் துரிதமாக்கினால் நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறமுடியும். இப்பகுதியில் தற்பொழுது இயங்குவது திலீபன் மருத்துவமனையாகும். இது ஆழியவளைக் கிராமத்தில் இயங்குகிறது. இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாது. வாரத்தில் ஒருநாள் மட்டும் மாமுனைக் கிராமத்தில் நடமாடும் சேவை நடைபெறுகின்றது. இது போதுமானதன்று. மேலும் தொண்டு நிறுவனங்கள் இப்பகுதிக்கு மருத்துவ சேவை வழங்க முன்வரவேண்டும்.

**கல்வி**

இங்கு அழிவுற்ற பாடசாலைகளைத் திருத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஒருசில பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் வழங்கப்பட்டும் சில பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் தானும் வழங்கப்படாத நிலையிலும் உள்ளன. கற்றல் உபகரணங்களும் சீரான முறையில் இல்லாது மாணவர்கள் தமது கல்வியை மிகவும் கஷ்டமான நிலையில் பயின்றுகொண்டிருக்கின்றனர். மற்றைய இடங்களில் பாடசாலைகள் கணனி மயமாகிக் கொண்டிருக்கும் காலத்தில் கட்டடங்கள் அற்ற நிலையில் இயங்கும் பாடசாலைகள் என்றால் அது வடமராட்சி கிழக்குப் பிரதேசப் பாடசாலைகள்தான். இக்குறைகளை நிவர்த்தி செய்ய கல்வித் திணைக்களமோ, அன்றேல் உதவி வழங்கும் நிறுவனங்களோ எதுவித நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

**வீதிகள்**

வடமராட்சி கிழக்கில் வீதிகள் மிகவும் சீரழிந்த நிலையில் உள்ளன. 30,40 வருடங்களுக்கு முன்பு களிமண்ணால் அமைக்கப்பட்ட வீதிகள்தான் இன்னமும் பாவனையில் உள்ளன. தார் ஊற்றப்பட்ட சில வீதிகள் திருத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. மீண்டும் இக் களிமண் வீதிகளை திருத்துவதற்கு நிகொட் ஸ்தாபனம் முன்வந்துள்ள நிலையில், இவ்வீதிகள் மீண்டும் களிமண்ணால் திருத்தப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. மழைநீர் தேங்கி நிறகும் இப்பிரதேசத்தில் உள்ள களிமண் வீதிகள் நீரால் அரித்துச் செல்லப்படுகின்றன. காலத்துக்குக் காலம் இது வழமையாக நடைபெறும் செயலாகும்.




**பி.ஆர்.மதுரநாயகம்**

வடபகுதியில் மீன்பிடியில் முன்னணியில் இருக்கும் இப்பிரதேசம், சீரான போக்குவரத்துப் பாதைகள் இன்மையால் மக்களின் பொருளாதாரம் பின்தள்ளப்பட்ட நிலைக்கே இட்டுச்செல்லும்.

**மின்சாரம், தொலைத்தொடர்பு**

மின்சாரமும் தொலைத் தொடர்பும் இப்பிரதேச மக்களுக்கு கணனுக்கெட்டாத் தூரத்தில் உள்ளன. மின்சார சபையும் ரெலிகொம் நிறுவனமும் விடும் அறிக்கைகளில் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கள் சேவை விஸ்தரிக்கப்படும் என்று குறிப்பிடப்படுகின்றது. ஆனால், இவ்விரு நிறுவனங்களும் ஏன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு தங்கள் சேவையை விஸ்தரிக்க பின்நிற்கின்றன?

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து மக்கள் அனுபவித்த துன்பங்களைவிட சாதாரண இயல்பு வாழ்வு தோன்றிய இக்காலத்தில், இப்பிரதேச மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் சொல்லொணாத் துன்பதுயரங்களை அனுபவிக்கின்றனர். இந்நிலையைப் போக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?


# மக்கள் முகம்



நல்லூர் மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த செல்வி பிரசாந்தினி யோகராஜா கலாசார நட்புறவுக்கான இந்தியப் பேரவையின் புலமைப் பரிசில் பெற்று பரதநாட்டிய உயர் கற்கைநெறிக்காக இந்தியா சென்றுள்ளார்.

இவர் யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார். திருமதி சாந்தினி சிவனேசனின் மாணவியாகிய இவர், சிறுவயது முதல் பல நடனப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளார்.


★ ★ ★ ★



யாழ்ப்பாணம், புகையிரத நிலைய வீதிப் பகுதியைச் சேர்ந்த திருமதி டக்ளஸ் லயனர் சத்தியபாமா, யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் குடும்பநல உதவியாளராக கடமைபுரியும் இவர், யாழ், நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.


★ ★ ★ ★



வடலியடைப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தசாமி, மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், வடலியடைப்பு பார்த்தனை ஐயனார் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அபிவிருத்திக் குழுவின் செயலாளராகவும், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகிறார். சில பொது நல நிறுவனங்களின் நிர்வாக சபைகளில் உறுப்பினராகவும் இவர் உள்ளார். (ஒ-135)


★ ★ ★ ★



வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ கணபதிச்சாமிக்குருக்கள் சுதர்சனக் குருக்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட இவர், சிறந்த எழுத்தாளருமாவார். 'ஏகாதசிதுவாதசி' எனும் ஆன்மீக நூலை எழுதி அண்மையில் வெளியிட்டுள்ள இவர், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் கரவெட்டி திருஇருதயக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவருமாவார். (ஒ-173)

★ ★ ★ ★



பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த மாதர் கந்தசாமி, அண்மையில் மல்லாகம் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலை, மெமோறியல் ஆங்கிலபாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவரவார் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுச் சபை இந்து சமய விருத்திச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் மானிப்பாய் சித்தி விநாயகர் ஆலயச் செயலாளராகவும் இவர் உள்ளார்.

உ
ஓம் கணபதியே நமஹ!

# குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் திருக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப் பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## 09.08.2003



1989ஆம் ஆண்டு இச்சித்திரத்தேர் ஓடியகாட்சி

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

சிவநேயச் செல்வர்களே!

தனிச் சைவத் தமிழ்க் கிராமமாக மிளிரும் குப்பிழானூரிலே 'கற்கரை' எனும் பதியிலே மூர்த்தி,தலம்,தீர்த்தம் ,விருட்சம் முதலிய சிறப்புக்களமைந்த பெருங் கோயிலிலே எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகப் பெருமானுக்கு 1975 ஆம் ஆண்டு புதிய விருத்த வடிவிலான சிற்பரதம் அமைத்து விழாச் செய்து வந்தமை யாவருமறிந்த விடயமாகும். நூற்றாண்டுக்கு மேலாக மஹோற்சவம் நடைபெற்றுவரும் யாழ்ப்பாணத்து ஆலயங்களிலே இதுவுமொன்றாயிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருக்கோயிலிலே கடந்த கால நாட்டுச் சூழ்நிலைகளாற் சேதமடைந்திருந்த மேற்படி சிற்பரதம் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்று வெள்ளோட்டங் காண்பதையறிந்து மட்டிலா மகிழ்வடைகின்றோம். .இத்திருப்பணியைத் தனியொருவராகவே செய்தளித்த திரு. பொ .ஜெகநாதன் குடும்பத்தினர் நீடு வாழவும், குப்பிழானூரின் குலதெய்வமாங் கற்பகவிநாயகனதடியார்கள் சிவ நெறியொழுகியின்புறவும் எல்லாம் வல்ல அங்கயற் கண்ணியுடனாய செந்தமிழ்ச் சோமசுந்தரனை வழுத்தி ஆசி கூறியமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள.



### பிரதமகுருவின் ஆசிச் செய்தி

மெய்யடியார்களே!

எம்பெருமான் கற்பக விநாயகப் பெருமானது பழைய சித்திரத்தேரானது புனரமைப்புச் செய்யப் பெற்று வெள்ளோட்டங்காணவிருப்பதில் மட்டிலா மகிழ்வடைகின்றோம். புனரமைப்புப் பணிகளைத் தனியொருவராகவே செய்வித்துதவும் திரு.பொ. ஜெகநாதன் அவர்கள், மனைவி பிள்ளைகளோடு சகல செல்வயோகம்மிக்க பெருவாழ்வெய்தி வாழ வாழ்த்துகின்றோம்.

விநாயகப் பெருமான் திருவருளால் யாவரும் இன்புற்று வாழட்டும்.

''லோகா சமஸ்தா சுகிநோ பவந்து''

சிவபூசா துரந்தரர்
சிவாசாரியமணி. சிவஸ்ரீ.சி.குமாரராஜ சிவாசாரியார்
பிரதம குரு

### ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் பெரும் பதியில் தமிழும் சைவமும் தழைத்து வளரும் குப்பிழான் கிராமம் பல கோயில்களைக் கொண்டதாகும். இக்கிராமத்தில் கணங்களுக்கு அதிபதியாகவும் பிரபஞ்ச நாயகனாகவும் விளங்கும் கற்கரைக் கற்பக விநாயகப் பெருமானை வணங்கும் அடியார்களின் உறை விடங்களில் எம்பெருமான் ஒளி விளக்காய் மிளிருவதை யாம் அறிவோம்.

காசிவாசி செந்திநாதையர் பிறந்த குப்பிழான் கிராமத்தில் 'இசைவல்லாளர் செல்லத்துரை திருமுறை வழி நின்று பண்ணிசை பரப்பியதும் திருமுருககிருபானந்தவாரியார் தரிசித்து சொற்பொழிவாற்றியதுமான கற்பக விநாயகர் ஆலயம் 1988ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் பெருங் கோயிலாக விளங்கியது.

ஈழத்தில் தொடரும் இன்னல்களால் ஆலயத்தின் கதவுகள் பூட்டப்பட்டு மஹோற்சவம் பத்து வருடங்கள் வரை இடம் பெறவில்லை. போரினால் சேதமுற்ற ஆலயத்தை தரிசிக்க வந்த மெய்யடியார்கள் 1997ஆம் ஆண்டு ஆலய கட்டட இடிபாடுகளைக் கண்டு நெஞ்சு உருக அழுது புலம்பினர். எம் மக்கள் குல தெய்வத்தை மறந்தவர்கள் அல்லர்.

IIIஆம் பக்கம் பார்க்க

### விநாயகனின் நினைவுடன்:

எம்குடும்பத்தின் குலதெய்வமாக நின்று எங்களைக் காத்து நிற்கின்ற கற்கரை விநாயகனுக்கு, அழிவடைந்த தேர் மண்டபத்தைப் புதிதாகவும், ரதத்தினைப் புனரமைக்கவும் வாய்ப்பளித்த ஆலய பரிபாலன சபையினர்க்கும் எம் பெருமான் அருட்கடாட்சம் தொடரின் மேலும் பணிகளைத் தொடர்வேன் என இந்நன்னாளில், குப்பிழான் மக்களுடன இணைந்து விநாயகனின் ரதபவனி சிறக்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

திரு.திருமதி பொன்னம்பலம்-ஜெகநாதன் குடும்பத்தினர்.

### மாவை ஆதீனகர்த்தாவின் வாழ்த்துச் செய்தி

மாருதப் புரவல்லி உக்கிரசிங்க மகாராஜாவினால் யாழ்பாடிக்கு அவனது இசைப்புலமை, சிவத்தமிழ் பாசுரங்களை யாழ்மூலம் ஒலிசெய்த மாண்பு, சிவநெறி ஒழுக்கம் என்பனவற்றோடு, அவனது சிவசின்னங்களால் அழகு செய்த உடம்பை முன்வைத்து யாழ்ப்பாண குடா நாட்டை யாழ்பாடிக்கு தானஞ்செய்தமை வரலாற்றுச் சான்றாக அமைந்திருக்கிறது. எனவேதான் இன்றும் யாழ்ப்பாணக் குடாநாடு சைவமும் தமிழும் செழுமைபெற்று வளர்கிறது. இருப்பினும் அந்நிய சகவாசங்களும் அந்நிய சமூகத்தின் உதைப்பும் யாழ்ப்பாணத்தை வாட்டி வதைப்பதையும் காணமுடிகிறது.

குரும்பசிட்டி, குப்பிழான்,ஏழாலை சார்ந்த கிராமங்கள் சிவநெறி சார்ந்த மக்களைத் தன்னகத்தே கொண்டிருந்து அங்குள்ள ஆலயங்கள் மூலம் சைவத்தையும் செந்தமிழையும் பக்தி நெறி சார்ந்த துறைகளில் ஆலயங்களூடாக நிலைநிறுத்தி ஆற்றுப்படுத்தி வருவதும் போற்றுதற்குரியன. இந்த வகையில் கற்கரைக் கற்பகவிநாயகரது மஹோற்சவத்தை சிறப்பாக நடத்துவதும் சைவ மக்களது சிவதர்மங்களது தவப்பயனேயாம். தேர்த்திருவிழா வின் மாண்பையும், அதனூடு பெறப்படும் திருவருட் துறைகளும், இன்றைய காலகட்டத்தில் சைவர்கட்கு அவர்தம் வாழ்வினை மேலோங்க வழி செய்யும் என்பது உண்மையாகும். அவ்வாறு விநாயகரது திருவருள் அபரிமிதமாக இந்நாட்டிற்கும் இணையவேண்டுமென யானும் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா

### ஆசிச்செய்தி.

ஆலயங்களே பக்திநெறியை வளர்க்கும் தெய்வீக வாயில்களாகும். வாழ்த்தவாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் குறிக்கோளாகும். இதன் பயனாகவே ஆலயங்கள் சிறப்படைந்தன. எமது உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் ஆலய வழிபாடு முக்கியமானது. இத்தகைய ஆலய வழிபாட்டில் நித்திய நைமித்திய விழாக்கள் மிகவும் முக்கியமானவை. கிரியைகளோடு கூடிய பூசைகள் மூலமே விக்கிரகத்தில் திருவருட் சக்தியைப் பெறமுடியும். இத்தகைய சிறப்பு வாய்ந்தனவையே மஹோற்சவ நாள்களாகும். நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளை நைமித்திய பூசைகளே நீக்குகின்றன". மக்களுக்கு ஆன்மீக சக்தியை ஊட்டும் நாள்களாகவும் இந்நைமித்திய விழாநாள்கள் அமைகின்றன. தேவசக்திகள் அனைத்தும் இம்மஹோற்சவ நாள்களில் திருக்கோயிலை நோக்கி இறங்கி வருகின்றன என்பது எமது சமய நம்பிக்கையாகும். இத்தகைய சிறப்புமிக்க நைமித்திய விழாவைக் கண்டுசிறப்படைகின்றது குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம்.

இம்மஹோற்சவத்தின் சிறப்பு இம்முறை சித்திரத்தேர் வெள்ளோட்டத்தால் மேலும் பெருமையடைகின்றது எனலாம். குப்பிழான் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் எம்பெருமான் விநாயகரின் அற்புதத்தை அனைவரும் அறிவர். இவ்வாலயத்தின் பெருமையையும் சிறப்பையும் நான் நேரில் கண்டு பலமுறை வியந்திருக்கின்றேன். இத்தகைய சிறப்புமிக்க விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டவிழா எடுக்கின்றனர் இவ்வூர் மக்கள். மஹோற்சவநாள்களில் தேர்த்திருவிழா மிகவும் முக்கியமானது. சங்காரத் தொழிலை உணர்த்தும் உற்சவமும் இதுவேயாகும். இத்தகைய பெருமைவாய்ந்த சித்திரத்தேரை புனரமைத்த சிற்பாசாரியார் அவர்களையும் இத்திருப்பணியில் ஈடுபட்ட அன்பர் அவர்களையும் அனைத்து விநாயக பக்த கோடிகளையும் வாழ்த்தி வணங்கி ஆசிகூறி எம்பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் பக்திபூர்வமாக நடைபெறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

-கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி. தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

### வாழ்த்துச் செய்தி

ஈழத்துச் சைவத்தமிழ் மக்களின் இராசதானியாக அன்றும் இன்றும் என்றும் திகழ்வது திருக்கேதீச்சரம், சம்பந்தரும் சுந்தரரும்திருப்பதிகங்கள் பாடிப்பரவிய திருத்தலம். இத்திருத்தலம் பதினாறாம் நூற்றாண்டிலே போர்த்துக் கேயரினால் தகர்த்துச் சிதைக்கப்பட்டு அங்கிருந்த பொன்பொருள்கள் யாவும் சூறையாடப்பட்டமை உலகறிந்த வரலாற்றுண்மையாகும். இவ்வாறிருக்கையிலே மாந்தைத் துறைமுக வியாபாரிகளாயிருந்த நம்மூதாதையர்களில் ஒருவர் அங்கிருந்து மூன்று விநாயகர் திருவுருவங்களை இவ்வூரிற் பிரதிஷ்டை செய்வதற்காக எடுத்து வந்தார். இவைகளில் ஒன்று நீர்வேலி வாய்க்காற் தெருவிலும் இன்னொன்று புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையிலும், மற்றையது குப்பிழான் கற்கரையிலும் தாபிக்கப்பெற்றது என்று கர்ணபரம்பரையாகப் பேசப்பட்டு வருகிறது.

'கற்கரை' என்ற பதம் 'கல் நெஞ்சுகூட உருகும்படி திருவருள் புரியும் விநாயகர் வாழ்பதி' எனும் பொருளினது. 'கற்பக விநாயகர்' சிதம்பரத்துக்குரியவர். வேண்டுவார் வேண்டுவதே ஈபவர். இப்பெருமான் திருக்கோயில் 1975ஆம் ஆண்டிலேயே தேர்ப்பவனி கண்டது. இலங்கையிலேயே முதன்முதலில்உருவாக்கப் பெற்ற விருத்த வடிவரதமும்

IIIஆம் பக்கம் பார்க்க

### ஆறு.திருமுருகன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் திருக்கோயில் போரின் அனர்த்தங்களால் சேதமுற்று சிலமுற்றது. விநாயகரின் மீளா அடியவர்கள் அழுது புலம்பினர். 'எனினும் தம்மை வாழ்வித்த குலதெய்வத்தை மீண்டும் உயர் ஆலயம் எழுப்பி மஹா கும்பாபிஷேகம் காணவேண்டும் என ஆவலுற்றனர். பெருங்கோபுரம் எழும்பி மகாகும்பாபிஷேகப் பொலிவு கண்டனர். சிற்பகலாகேசரி தம்பித்துரையின் கைவண்ணத்தில் எழுந்த சித்திரத்தேர் குண்டு மழையில் சரிந்து உதிர்ந்து போன காட்சி அடியவர்களை தினமும் நினைந்து வேதனைப்படுத்தியது. விநாயகரின் திருவருளால் மீளா அடியவர்கள் மீளத் திருப்பணியை ஆரம்பித்து தேர் கொட்டகையை உருவாக்கி, திருத்தேரையும் அழகுற அமைத்து இன்று வெள்ளோட்டம் காண்பது அற்புதமான ஆனந்தத்திருவருள். கற்கரையானின் திருக்கோயில் பெருங்கோயிலாக விளங்க அன்று அரும்பாடுபட்ட சைவபூஷணம். திரு.கா.நல்லையா அவர்களின் பணிகள் இன்று மீண்டும் உயிர் பெற்றுள்ளமை மகிழ்ச்சியைத்தருகிறது. தேர்த்திருப்பணி புனர்நிர்மாணம் பெற உழைத்த திரு.பொ.ஜெகநாதன் குடும்பத்தை வாழ்த்துகிறேன். ஆலய திருப்பணிச்சபையின் அயரா முயற்சியை போற்றுகிறேன். கற்கரைப் பிள்ளையாரின் கழலடி போற்றி குப்பிழான் திருவூர் மீண்டும் சிறப்புற நல்லருள் தந்த இறைவனுக்கும் இனிய அடியவர்க்கும் நன்றி கூறி அமைகிறேன்.

செஞ்சொற் செல்வர், ஆறு.திருமுருகன்.

### பிரார்த்தனைச் செய்தி

ஈழ மணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ். தீபகற்பத்தின் குப்பிழான் பதியில் எழுந்தருளியிருக்கும் கற்கரைக் கற்பக விநாயகனுக்கு இன்று புதிய ரத வெள்ளோட்டம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகின்றது.

குப்பிழான் பதியில் இருக்கின்ற ஆலயங்களில் நீண்ட காலமாக ரதோற்சவம் நடைபெற்றுவந்த ஆலயம் குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம் ஆகும். நாட்டின் வடபால் மேற்கொள்ளப் பட்ட யுத்த நடவடிக்கைகளால் ஆலயமும் ரதத் தரிப்பிடம், ரதம், மணிமண்டபம் என்பனவும் கடுஞ்சேதத்திற்குள்ளாகின. இந்த நிலையில் மீளக் குடியமர்ந்த குப்பிழான் மக்களின் அயராத முயற்சியினால் ஆலயத்தினைப் புனரமைத்து மஹா கும்பாபிஷேகம் செய்ய முடிந்ததுடன் தொடர்ச்சியாக இராஜகோபுர கும்பாபிஷேகத்தையும் சிறப்புடன் செய்து இன்புற்றிருந்த வேளையில் ''இந்தக் கற்கரைக் கற்பக விநாயகனின் ஆலயத்தில் முன்பு கண்ட அந்த அழகிய ரதோற்சவ காட்சியினை காண்பது எப்போது'' என்ற கேள்வி கற்பக விநாயகனின் ஒவ்வோர் அடியாரது மனதிலும் எழுந்தது. அந்தவகையில் தேர்த்திருப்பணிக்கான நிதியினை பரிபாலன சபையினராகிய நாம் நாடி நிற்கும் இவ்வேளையில் அந்த அரிய காட்சியினைக் கண்டு பக்தர்களாகிய நாம் பக்திப் பிரவாகத்துடன் எம்பெருமான் கற்கரைக் கற்பக விநாயகனை வழிபட்டு அவரின் இஷ்ட சித்திகளைப் பெற்று பெருவாழ்வு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.சிவலிங்கம் ரதீஸ்குமார். பொருளாளர். பரிபாலனசபை

### ஆதீனப் புலவரின் வாழ்த்துரை

உழவுத் தொழிலை மிகுதியாகக் கொண்ட சான்றோரும் அறிஞரும் வாழ்ந்து வரும் வளம் மிக்க கிராமம் குப்பிழான். ஆறுமுகநாவலரின் அணுக்கத் தொண்டராக இருந்து சிவப்பணி செய்த காசிவாசி செந்திநாதையர் பிறந்த இக்கிராமம் சித்தாந்த சைவத்தின் நிலைக்களமாக விளங்கிவருகிறது.

இக்கிராமத்தில், கற்கரைப் பதியில், கற்பகவிநாயகன் அருளாட்சி செய்யும் ஒரு திருக்கோயில் உண்டு. தொடர்ந்து நடைபெற்ற போரினால் இடிபட்டுப் பொலிவிழந்த இப்பழம்பெரும் கோயில் இன்று புனரமைக்கப்பட்டு அழகுறத்திகழ்கிறது.

புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது சைவமக்களுக்கு பெருமகிழ்ச்சி அளிக்கும் ஒரு நிகழ்வாகும். கொடியேற்றம், தேர், தீர்த்தத்துடன் திருவிழாவை மீண்டும் காணும் கிராமமக்கள், விநாயகப் பெருமான் அருளால் இன்னல்கள் நீங்கி புதுவாழ்வு காண்பர் என்பதில் ஐயமில்லை.

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகன் அடி தொழும் அன்பர்கள் எக்குறையும் இன்றி நலம் பெறவும், அவர்களின் திருக்கோயில் சிறக்கவும் விநாயகனின் திருவடிகளைத் தொழுது வாழ்த்துகிறேன.

அன்பன்
சித்தாந்த ரத்தினம
கலாநிதி க. கணேசலிங்கம்
ஆதீனப்புலவர். லண்டன் மெய்கண்டார் ஆதீனம்
தலைவர். சிவத்திருமன்றம். கொழும்பு.

### சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித்திருநாட்டின் முடிபோலத்திகழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தனித்தமிழ்ச் சைவக்கிராமம் குப்பிழான் கிராமம். குப்பிழான் கிராமம் ''யாழ்ப்பாணத்தின் திருப்பரங்குன்றம்'' என்பது பண்டிதமணியின் கருத்து. இக்கிராம மக்களின் குலதெய்வமாக, பேசும் தெய்வமாக நின்று பேரொளி பரப்பும் கற்பக விநாயகன் மீண்டும் புதுப்பொலிவு பெற்று இன்று தன் அழகுத் தேரினை அழைத்துச் செல்கின்றார்.

அகில உலகெங்கும் வாழும் குப்பிழான் கிராம மக்களும் சைவப் பெருமக்களும் மனமகிழ்வுகொள்ளும் நன்னாள் இந்நாள் இந்நிகழ்வினை நடத்தி சிறப்புப் பெறுகின்றது. திரு. பொன்னம்பலம் ஜெகநாதன் குடும்பம். தனியொரு குடும்பமாக நிறைவேற்றும் இமாலயச் சாதனையிது. அவர்களுக்கு எம்பெருமான் என்றும் துணையிருப்பார். பல்வேறு துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்த எம்மக்களுக்கும், குப்பிழான் கிராமத்தவருக்கும் மஹோற்சவ ஆண்டாக விளங்கும் இவ்வாண்டு, ஆலயபரிபால சபையினரின் அயராத முயற்சியின் பயன் இது. அவர்களையும், கிராமத்தவர்களையும், பெரும் பங்களிப்புக்கள் நல்கியோரையும் இன்றைய ரதபவனியிலே வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்''

சிவ மகாலிங்கம்.
உதவிப் பணிப்பாளர். இந்து கலாசார அமைச்சு. யாழ்ப்பாணம்.

**ஆலய தேர்த்திருவிழா 10.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு இடம்பெறும்.**

**விளம்பர அனுசரணை: திரு.பொன்னம்பலம் ஜெகநாதன் குடும்பத்தினர் (தேர் புனரமைத்தோர்)**

# வாழ்த்துகின்றோம்



இன்று அமுத விழாக்காணும்
**சுகணா** தம்பதியினரை
பல்லாண்டு காலம் சுகதேகிகளாக
இன்பமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சி.கணேசமூர்த்தி குடும்பம்
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி-29387)(21-12-16)

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதிகாலை 5மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்சிகள் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடையும். (ஐ)

## யோகாசன வகுப்பு

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வாரத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை வகுப்புகள் இடம்பெறுகின்றன. (ஐ)

## இந்துமன்ற தொண்டர்களுக்கு!

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ தொண்டர் சேவை தொடர்பாக யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கந்தர்மடம், குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாடசாலைகளின் இந்துமன்ற உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு பேரவையின் தலைவர் இ.தவகோபால் கேட்டுள்ளார். (ஒ-10)

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆலய....

அடியார்களும் பரிபாலன சபையினரும் திருப்பணிகளில் பங்காளிகளாக மாறி பல திருப்பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

சைவ பூஷணம் திரு.கா. நல்லையா அவர்களின் முயற்சியால் 1975 .08.17 ஆம் திகதி அமைக்கப்பட்ட சித்திரத்தேர் விநாயகப் பெருமானின் திருவருளினால் இன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இத்திருப்பணிக்காக உழைத்த அரன் பணி வழுவாத திரு. பொ. ஜெகநாதன் குடும்பத்தினருக்கும் சித்திரத்தேர் வெள்ளோட்டநன்னாளில் வடம் பிடிக்கும் அடியவர்களுக்கும் விநாயகப் பெருமானின் அபரிமிதமான திருவருள் கிடைக்கவேண்டுமென வணங்கி இச்சிவபுண்ணியச் செயல்களையும் ஆலயத்தொண்டுகளையும் நிறைவேற்றிவரும் அடியார் பெருமக்களையும் வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

நா.செல்வரத்தினம்
நா.கணேசலிங்கம்
இணைச்செயலாளர்கள்.

க.சின்னராசா
தலைவர்.
ஆலய பரிபாலனசபை.

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

## வாழ்த்துச்........

இதுவேயென்பதுங் குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டிலே கடந்தகால யுத்தங்களால் ஏற்பட்ட தழும்புகள் இத்திருக்கோயிலையும் விட்டுவைக்கவில்லை. பழமையான சித்திரத்தேரும், தேர்த்தரிப்பிடமும் பழுதடைந்தநிலையிலே காணப்பட்டன. இதனையறிந்து இக்கோயிற் சூழலிலே பிறந்துவளர்ந்து, இன்று வெளிநாட்டிலே வாழ்கின்ற திரு.பொ. ஜெகநாதன் அவர்கள் இத்திருப்பணிக்கைங்கரியத்தைத் தாமொருவராகவே பொறுப்பெடுத்து நிறைவு செய்திருக்கிறார். இன்றைய வெள்ளோட்ட நாளிலும், நாளைய தேர்த்திருவிழாவிலும் அடியாரானீர் எல்லீரும் விரைந்துவந்து வடந்தொட்டு வானகத்தே இடங்கொள்கவென வேண்டுகின்றோம். பேர், புகழுக்காகவின்றிச் செம்மை மனத்தாலே திருப்பணிகளைச் செய்து வரும் திருவாளர். பொ.ஜெகநாதன் அவர்கள் சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

சிவசிவ -சைவப்புலவர். ஏ.அனுசாந்தன்.

## நேர்முகத தேர்வு

07-08-2003 'உதயன்' நாளிதழில் பிரசுரமானதற்கிணங்க-வடமராட்சி கனனி நிறுவன நிர்வாகியைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வு நாளை (10-08-2003) ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும்.

**E - VILLAGE INSTITUTE**
கிராமக் கோட்டுச் சந்தி, பருத்தித்துறை.

(21202) ☎ 0777 704583 (21-12-16)

## மேசன்மார்கள் தேவை

கட்டுமானப் பணிகளிலும் கோவில் கட்டடப் பணிகளிலும் முன் அனுபவமுள்ள மேசன்மார்கள் உடனடியாகத் தேவை.
திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.
தினமும் மதியம் 2 மணி தொடக்கம்
கீழ்க்காணும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும்.

**S.கிருஷ்ணமூர்த்தி மணிகண்டன்,**
20, வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவில் வடக்கு,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
செல்.-0777 - 650519



(21214) (12-21-16)


## 20% - 25% தள்ளுபடி

COSMO
டீசல் ஜெனரேட்டர்ஸ்

- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை




Access Graphics

மேலும் விபரங்களுக்கு:
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் H
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 337286, 337283-5, 324261-5


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் பொன்னையா சோமசுந்தரம்

(முன்னாள் கல்வி அதிகாரி - வவுனியா, முன்னாள் அதிபர் - யா/மகாஜனக் கல்லூரி, யா/நடேஸ்வரக் கல்லூரி)

தோற்றம் 04-02-1927
மறைவு 14-07-2003

திதி வெண்பா

செந்தமிழும் தூனெறிச் சைவமும் தழைக்கும்
சுந்தர யாழ்.மண்ணீந்த சோமசுந்தரனார்
ஆண்டது சுபானுவின் ஆனித்தேய் பிறை முதலில்
ஆண்டவன் பூங்கழல் சேர்ந்தார்.

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்து எமையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர் **அமரர் பொன்.சோமசுந்தரம்** அவர்களின் மறைவுகேட்டு, நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உள்ளூரிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி, கடிதம் மற்றும் தந்தி மூலம் தேறுதல் தெரிவித்தவர்களுக்கும் அவரின் பூதவுடலுக்கு மலர்வளையம் வைத்தும், மலர்மாலை சூட்டியும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் பங்குபற்றி பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், நடேஸ்வரா-மகாஜனக் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சுகந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும் யாழ். அத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் அந்தியேட்டி வைபவம் பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியில் அமைந்துள்ள Community Centre இலும் இன்று (09-08-2003) சனிக்கிழமை நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றிக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
தகவல்: சுந்தரராணி, கந்தசாமி
(SriLanka Telecom)

(21222)(21-12-14)

உ

அல்வாயூர் 'சுகணா' தம்பதிகளின்

# அமுத விழா

இடம்: அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கலாசார மண்டபம்
காலம்: இன்று (09-08-2003) சனிக்கிழமை பிற்பகல் 2.30மணி
தலைவர்: திரு.கி.நடராசா அதிபர் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

நிகழ்வுகள்

மங்கள விளக்கேற்றல்
வரவேற்புரை: திரு.மு.சுந்தரலிங்கம் - சதாபொன்ஸ்

வாழ்த்துரை
பிரம்ம ஸ்ரீ சுரேஸ்வரக்குருக்கள் - அம்மன் தேவஸ்தானம்
திரு.வே.வீரபத்திரபிள்ளை - பிரதேச செயலர், கரவெட்டி.

தலைமையுரை

மலர் வெளியீட்டுரை
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

பாராட்டுரை
திரு.ஆ.சிவநாதன் ஆசிரியர்
திரு.செ.சதானந்தன் இளைப்பாறிய அதிபர்
திரு.தா.சுந்தரலிங்கம் சமூகசேவையாளர்

ஏற்புரை
திரு.சு.கணபதிப்பிள்ளை

நன்றியுரை
திரு.நா.சந்திரசேகரம் ஓய்வுபெற்ற அதிபர்

முதல் மூன்று பிரதிகள் பெறுபவர்
திரு.ஆ.ஜெகநாதன் *அதிபர்* - வேலாயுதம் மகாவித்தியாலயம்
திரு.சி.கணேசமூர்த்தி *தலைவா* - திருப்பணிச்சபை
திரு.க.சிவபாதசுந்தரம் தம்பி தொலைத் தொடர்பகம்

குறிப்பு: *விழாத் தம்பதிகள் பிற்பகல் இரண்டு மணிக்கு அன்னா இல்லத்திலிருந்து கலாசார மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவர். இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.*

அவர்தம் மக்கள், க.தமிழ்அழகன், ச.பூங்கோதை, பா.தமிழ்மலர்,
செ.மணிமேகலை, ப.கனிமொழி, க.கணேசானந்தன்

(சி-29386)(21-16-12)

# ஆசிய நாடுகளில் காலபதிக்கத் துடிக்கும் அமெரிக்காவுக்கு பிலிப்பைன்ஸ் பலியாகுமா?

**அண்மைக் காலமாக பிலப்பைன்ஸ் நாட்டில் அடுத்தடுத்து கிளர்ச்சிகள், புரட்சிகள் இடம்பெற்று வருகின்றன. லஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழிப்போம் எனக் கூறி மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த தலைவர்கள் அதே தவறுகளை தாமும் தொடருகின்றனர். பயங்கரவாதத்தை ஒழிப்போம் என்ற போர்வையில் ஆசிய நாடுகளில் கால்பதிக்க முயலும் அமெரிக்காவுக்கு பிலிப்பைன்ஸ் நாடும் பலியாக வாய்ப்புக்கள் உள்ளன. இது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டில் இராணுவப் புரட்சிமூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகள் இடம்பெறவில்லையாயினும், பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள ஆட்சியாளர்கள் பலாத்காரமாகப் பதவியிலிருந்து அகற்றப்படும் நிகழ்வுகள்



பிலிப்பைன்ஸ் புலனாய்வுப் பிரிவு அதிகாரி கேணல் விக்ரர் கோபஸ்

இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே இடம்பெற்றுள்ளன. 1986 ஆம் ஆண்டில் மணிலா நகரத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பின் பின்னணியில் ஆட்சியாளர்களுக்கெதிராகப் பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஜனாதிபதி மார்க்கோஸ் தமது அதிகாரத்தைத் துறந்து நாட்டைவிட்டுத் தப்பியோட நேர்ந்தது. அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி யோசெப் எஸ்ராடாவுக்கு எதிராக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில ஈடுபட்ட பொதுமக்களைக் கட்டுப்படுத்த இராணுவ மேலதிகாரிகள் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது மறைமுகமாக அவர்களது ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளித்தமையால் ஜனாதிபதி யோசெப் எஸ்ராடா, உதவி ஜனாதிபதியாகவிருந்த மகபாகல் அரோயோவிடம் தனது ஜனாதிபதிப் பதவியைக் கையளித்துவிட்டு வெளியேற நேர்ந்தது. ஜனாதிபதி மார்க்கோஸுக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த கொரோசோன் அக்கினோவின் ஆட்சிக்காலத்தில் பல இராணுவப் புரட்சி முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவாயினும் பொதுமக்களின் ஆதரவு கிட்டாமையால் அவை யாவும் தோல்வியைத் தழுவநேர்ந்தன. இராணுவத்தைவிட்டுத் தப்பி ஓடியவர்களெனக் கருதப்படும் ஒரு குழுவினரால் அண்மையில் தலைநகர் மணிலாவில் வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதியிலமைந்த கட்டடமொன்றைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட முயற்சி, பொதுமக்களின் ஆதரவு கிட்டாத காரணத்தால் தோல்வியில் முடிவடைய நேரிட்டது.

பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் அனுபவம் வாய்ந்த குழுவொன்றைச் சேர்ந்த இராணுவ வீரர்களையும் அதிகாரிகளையும் உள்ளடக்கிய 300 பேர் வரையிலானவர்கள் தலைநகர் மணிலாவின் ஆடம்பரமிக்க கட்டடமொன்றைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தமை அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்திலல்ல. நாம் எமது சிரமங்களை அரசுக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படுத்தும் நோக்கத்திலேயே இவ்வித நடவடிக்கையில் இறங்கினோம்."நாம் வெடிபொருள்களையும் துப்பாக்கிகளையும் எமது சொந்தப் பாதுகாப்புக் கருதியே வைத்திருந்தோம். தேவை ஏற்பட்டால் மட்டுமே அவற்றைப் பயன்படுத்த நினைத்திருந்தோம்" என இக்கிளர்ச்சிக் குழுவுக்குத் தலைமைதாங்கியவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார். எந்தவொரு துப்பாக்கி வேட்டும் தீர்க்கப்படாத நிலையில் 19 மணித்தியாலங்களின் பின்னர் அக்கிளர்ச்சியாளர்கள் தமது தங்குமிடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

ஜனாதிபதி அக்கினோவின் பதவிக் காலத்தில அவரைப் பதவியிலிருந்து அகற்றும் நோக்கில் பல புரட்சி நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டவரும் தற்போது செனற் சபை உறுப்பினராகப் பதவி வகிப்பவருமான 'கிறகறியோ கோனாஸ்' என்பவரே கிளர்ச்சியிலீடுபட்ட இந்த இராணுவ வீரர்களுடன் பேச்சுகளை மேற்கொண்டார். முன்னர் இவ்வித புரட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டசமயம் 'கோனாஸ்' அவற்றுக்காக முன்வைத்த காரணங்களுக்கும், அண்மையில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் இடையே ஓர் ஒற்றுமை தென்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அரசின் உயர் மட்டங்களில இடம் பெறுவதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன் அவற்றுக்கெதிராகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரியே அண்மையில் அந்த இராணுவ வீரர்கள் கிளர்ச்சி நடவடிக்கையொன்றில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மார்க்கோஸின் எதேச் சதிகார ஆட்சியை வீழ்த்தியமைக்காக அவரது ஆட்சியில ஊழல் மற்றும் ஏமாற்று நட வடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டமையை பொதுமக்களைப் போன்றே வர்த்தகர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோரும் காரணங்காட்டினர். ஆனால், ஊழல் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளை ஒழித்து நாட்டு மக்களுக்கு நியாயமான ஆட்சி வழங்குவதாகக் காட்டிக் கொண்ட அக்கினோவின் நிர்வாகத்திலும் அவை குறையவில்லை.



பிலிப்பைன்ஸ் இராணுவம்

தற்போதைய ஜனாதிபதி 'அரோயோ' ஜனாதிபதிப் பதவியை அடைவதற்குக் காரணமாக அமைந்தது எஸ்ராடோவின் நிர்வாகத்தின் லஞ்சம், ஊழல் மற்றும் நீதியற்ற நடவடிக்கைகள் அதிகரித்தமையேயாகும். எஸ்ராடோவைப் பதவியிலிருந்து அகற்றி அரோயோ அப்பதவிக்கு நியமிக்கப்பட்டபோதும், அக்கினோவைப் போன்றே திறமையற்ற, செயற்றிறன் குறைந்த தலைவராக அவர் விளங்கியமையால், அவராலும் எவ்வித முன்னேற்றங்களையும் உருவாக்க முடியவில்லை. அதுமட்டுமல்லாது பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் இயங்கும் முஸ்லிம் பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆயுதங்களை இரகசியமாக விற்பனை செய்ததாகவும் ஆயுதக் கொள்வனவின் போது உயர் அதிகாரிகளைப் போன்றே அரசியல்வாதிகளும் தரகுப் பணம் பெற்றுக்கொண்டதாகவும் இராணுவக் கிளர்ச்சிக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். முஸ்லிம்களது கிளர்ச்சிகள் பெரிய அளவில் இடம் பெறுவதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் அமெரிக்காவிடமிருந்த யுத்த உதவி என்றவகையில் பெற்றுக்கொள்ளும் நிதியின் பெரும் பகுதியை இந்த உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சுருட்டிக் கொள்வதாக மற்றொரு குற்றச்சாட்டையும் சுமத்தியுள்ளனர்.

இதன் அடிப்படையில் முற்றுமுழுதாகத் தோல்வியில் முடிவடைந்த அண்மைக்காலக் கிளர்ச்சி நடவடிக்கை ஒருபுறம் வரலாற்றின் திருப்பமாகும். மற்றொரு புறம், இதை எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் பலம் வாய்ந்ததொரு நிகழ்வுக்கான முன் எச்சரிக்கையாகவும் கருதமுடியும்.

## வீயெஸ்ரி

ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வரையிலான வீரர்களைக் கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டின் அரசை வெறும் 300 பேர் வரையிலான இராணுவ வீரர்களின் கிளர்ச்சி மூலம் வீழ்த்தி விட முடியுமெனவோ, அதற்காகப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டிக்கொள்ள முடியுமெனவோ நம்பமுடியாதென்பது வெளிப்படையாகும். ஆனால், கிளர்ச்சியாளர்கள் வெளியிட்ட குற்றச்சாட்டுக்களை அவர்களது தோல்வியைக் காரணம் காட்டி மூடிமறைத்து விடமுடியாது. கிளர்ச்சியாளர்கள் முன்வைத்த ஊழல் மற்றும் லஞ்சம் என்ற விடயங்கள் ஏனைய பல நாடுகளைப் போன்றே பிலிப்பைன்ஸ் நாட்டு அரசியல் நிர்வாகத்திலும் தொடர்ந்து நிலவிவந்துள்ள போதிலும், அவற்றை ஒழிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திறமை இதுவரை நாட்டை நிர்வகித்த எந்த அரசியல் தலைவர்களிடமும் காணப்படவில்லை. ஜனாதிபதி எஸ்ராடோவைப் பதவியிலிருந்து அகற்றிய சந்தர்ப்பத்தில் நாட்டில் ஊழல் மற்றும் லஞ்ச நடவடிககைகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்காக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பமொன்று புதிய ஜனாதிபதி 'மகபாகல் அரோயோவுக்கு ' கிடைத்திருந்தது. ஆயினும் அவரால் ஏன் அந் நடவடிக்கைகளில் வெற்றிபெற முடியவில்லை? முன்னாள் ஜனாதிபதி எஸ்ராடாவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை விரைவாக நடத்தி முடிக்கக்கூடிய திறமையோ, பொறுப்புணர்வோ இல்லாமையால் அந்த விசாரணைகள் இழுபடுகின்றன. ஆதலால் அதற்கு முன்னர் ஜனாதிபதியாகப் பதவிவகித்த 'பீடல் ரமோஸ்' போன்றோரின் நிர்வாக காலத்தில இடம்பெற்ற லஞ்ச ஊழல் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்குக் கால அவகாசம் எதுவும் கிடையாது. தற்போதைய ஜனாதிபதியின் அரச நிர்வாகத்தில் அரச உயர் அதிகாரிகளுக்கு மட்டுமன்றி, அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் ஊழல் மற்றும் லஞ்ச நடவடிக்கைகளில் சம்பந்தம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. அடுத்ததாக ஒரே இடத்தில் ஸ்தம்பித்துள்ள பிலிப்பைன்ஸ் நாட்டின் பொருளாதார நிலையில் அபிவிருத்தியை மேற்கொள்ள அவரால் முடியவில்லை. பொருளாதார வல்லுநரான ஜனாதிபதி 'அரோயோ'வுக்கு நாட்டின் பொருளாதார நிலைதொடர்பான சரியான நிலைப்



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அரோயோ

பாட்டை தெரிந்துகொள்ள இயலாமையால், அவர் யோசெப் ஸ்டிக்ரிக்ஸ், ஜெப்ரி சாக்ஸ் மற்றும் போல் குறாக்மன் போன்ற பொருளாதார வல்லுநர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட உலகமயமாக்கல் மற்றும் தனியார் மயப்படுத்தல் போன்ற தோல்வியை அளிப்பதாக மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட- பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டார். 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அவர் மேற்கொண்ட அமெரிக்க விஜயத்தின் பலனாக பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு அமெரிக்காவினால் வழங்கப்படுமென ஒப்புக்கொள்ளப்பட்ட 420 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் மற்றும் முதலீட்டு வசதிகள் மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிடமுடியுமென்ற எதிர்பார்ப்பும் வெற்றியளிக்கவில்லை.

இன்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரதானமான வருவாயைத் தேடிக் கொள்ளும் மார்க்கமாக, பயிற்சிபெற்ற, மற்றும் பயிற்சிகளற்ற தொழிலாளர்களின் உடல் உழைப்புத்திறனை வெளிநாடுகளுக்கு வழங்குவதன்மூலம் தேடிக்கொள்ளும் வெளிநாட்டுச் செலாவணியே இருந்து வருகிறது. 1997இல் ஆசிய நாடுகளின் அடிப்படைப் பொருளாதாரச் சிக்கல்களை வென்றெடுக்கும் நோக்கில் மலேஷியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகள் கடைப்பிடித்து வெற்றி கண்ட வேலைத் திட்டங்கள் தொடர்பான நோக்கு தற்போதைய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

அதுமட்டுமன்றி, 1986இல் பொதுமக்களின் ஒத்துழைப்பின் மூலம் பெற முடிந்த வெற்றியாகக் கருதப்படும் சுயாதீன வெளிநாட்டுக்கொள்கை நலிவடைந்தமைக்கும் ஜனாதிபதி அரோயோவின் திறமையீனமே காரணமாகும். 1992இல் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை அகற்றிவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை காரணமாக மீண்டுமொரு தடவை ஆசியப் பிராந்திய நாடுகளுடன் நெருககமான உறவுடன் செயற்படச் சந்தர்ப்பமொன்று வாய்த்தது. ஆனால், 2001 செப்ரெம்பர் 11ஆம் நாள் அமெரிக்காவில் இடம்பெற்ற நிகழ்வுகளையடுத்து சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் அமைதி நிலவும் ஆசியப் பிராந்தியத்தில் இராணுவத் தளமொன்றை நிறுவுவதற்கான அமெரிக்காவின் தேவையை ஜனாதிபதி அரோயோ தானாகவே முன்வந்து பூர்த்திசெய்தார்.

நாட்டின் தென்பகுதி முஸ்லிம் பிரிவினைவாதிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ உதவியைப் பயன்படுத்திக் கொண்டதன் மூலம், மோடோ பிரதேச பிரச்சினையைச் சர்வதேசப் பயங்கரவாதத்துக்கெதிரான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகக் கருதத்தக்க வாய்ப்பை உருவாக்கினார். மின்டநாவோவில் மொரோ பிரதேசத்தில் முஸ்லிம் மதப் பிரிவினர் பல தசாப்த காலம் அனுபவித்து வரும் அரசியல் மற்றும் பொருளாதாரச் சிரமங்கள் தொடர்பாக உரிய தீர்வு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமையே அபுசாயவ் போன்ற கொலைகாரக் கும்பல்கள் உருவாவதற்குக் காரணமாயிற்று. இம்மோதல்களுக்குத் தீர்வுகாணக்கூடிய அரசியல் அனுபவமோ, தலைமைத்தவம் வகிப்பதற்கான தகுதியோ ஜனாதிபதி ஆரோயோவுக்குக் கிடையாதென்பது இக்கிளர்ச்சியாளர்கள் கொண்டுள்ள கருத்தாகும்.

முஸ்லிம் இனப் பிரிவினைவாதிகளுக்கும், கம்யூனிஸ்ட் கெரில்லா அமைப்புக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் யுத்த நடவடிக்கைகள் காரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டின் இராணுவத்தினரிடையே ஊழல் மற்றும் லஞ்ச நடவடிக்கைகள் பெரிய அளவில் அதிகரித்திருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் சில இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள், முஸ்லிம்களின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் காரணங்காட்டி அமெரிக்காவிடமிருந்து மேலும் உதவிகளைப் பெற்றுக்கொள் ளும் நோக்கத்துடன் அரசுக்கு நெருக்கமான சில பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்டவையெனக் குற்றம் சாட்டப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டின் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கெதிராக அமெரிக்கா முன்னெடுத்துச் செல்லும் யுத்தம் பிலிப்பைன்ஸ் அரசுக்கு உதவியாக அமைவதால், மோடோ பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் அனாவசியமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையெனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

2004ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லையென்ற ஜனாதிபதி ஆரோயோவின் அறிவித்தலானது எதிர்கொள்ள வேண்டிய அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவரால் இயலாது என்பதனை வெளிப்படுத்துகின்றது. ஆனால், அவரது கருத்துக்குறித்து பிலிப்பைன்ஸ் நாட்டின் சில சமூகப் பிரிவினர் மத்தியில் நிலவும் சந்தேக சமிக்கைக்கான காரணம், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்து முன்னாள் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கோஸ் மேற்கொண்ட விதத்தில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி தொடர்ந்தும் பதவியில் நீடித்திருப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி அரோயோ மேற்கொள்ளக்கூடும் எனப் பரவலாகப் பேசப்படும் கருத்தேயாகும். அண்மையில் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி அரோயோ , மீண்டுமொரு தடவை தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை எனத் தெரிவித்திருப்பினும், அக்கருத்துக் குறித்து உருவாகும் நம்பிக்கையீனம் மீண்டும்மோதல்கள் உருவாவதற்குப் போதுமானவையா எனக் கூற முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் அண்மையில் நடந்தேறிய இந்நிகழ்வுகள் போன்ற பலவற்றை பிலிப்பைன்ஸ் நாட்டின் அரசியல் விமர்சகர்கள் சந்தித்துள்ளனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் சமூக மற்றும் அரசியல் புரட்சிகள் உருவாக ஆரம்பித்துள்ளதாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர்களில் ஒருவரான வோல்டன் பலோ என்பவர் கருத்துத் தெரிவித்திருந்தார். அத்துடன், அது இரத்தம் சிந்தாத முறையிலான புரட்சியாக அமைய வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அண்மையில் இடம் பெற்ற நிகழ்வு இரத்தம் சிந்தாத வகையில் முடிவடைந்தமையையிட்டு மகிழ்ச்சியடைய முடியுமாயினும், அது எதிர்காலத்திலும் இரத்தம் சிந்தாத விதத்தில் இடம்பெறுமா என்பதை உறுதியாகக் கூறிக் கொள்ள இயலாதுள்ளது.

★